# குற்றவியல் நீதி முறையைக் கையாளுவது எப்படி?

**பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவருக்கான கையேடு**

**வழக்கறிஞர் இணைப்புக் குழு – பெண்ணுரிமை முன்முயற்சி**

LAWYERS COLLECTIVE

# முன்னுரை

பாலியல் வன்முறைக்குப் பலியாகி பிழைத்துவந்தவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு நடத்துவதை அத்தனை எளிதற்ற ஒன்றாக ஆக்குவதாக குற்றவியல் நீதிமுறை இருக்கிறது. இந்தியாவில் வன்புணர்ச்சி குற்றங்கள் குறைவது குறித்த அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் ஏதும் கிடைப்பதில்லை என்ற நிலையிருக்க, குற்றவியல் நீதிமுறையின் துவக்க கட்டத்திலேயே, அதாவது, குற்றத்தைப் பற்றி புகார் அளிக்கும் நிலையிலேயே, பல குற்றங்கள் காணாமல் போய்விடுகின்றன என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. பாலியல் குற்றம் செய்தவர்களில் வெகு சிலருக்கே தண்டனை கிடைப்பதால், குற்ற விசாரணையின் போது குற்றம் சாட்டுபவர் விலகிக்கொள்வது அல்லது சாட்சியங்கள் / ஆதாரங்கள் பற்றாக்குறையின் காரணமாக குற்றம் நிரூபிக்கப்படாமல் போவது நிகழ்கிறது. நீதி பரிபாலனத்தை வெற்றிகரமாக முடிப்பதற்குத் தடையாக மேற்சொன்ன காரணிகள் இருப்பது மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவரின் தேவை என்னவோ அதனைச் செய்து முடிப்பதை நோக்கமாக கொண்ட செயல்பாடு முன்னுக்கு வரவேண்டிய தேவையையும் அது சுட்டிக்காட்டுகிறது.

பாலியல் குற்றங்களில் தண்டனை வழங்கப்படுவதை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் 2012 (Protection of Children from Sexual Offences Act, 2012 ("POCSO Act") மற்றும் 2013ல் திருத்தம் செய்யப்பட்ட குற்றவியல் சட்டத்திலும் பாலியல் வன்புணர்ச்சி வழக்குகளில் மருத்துவமனைகள் கட்டாயமாக தகவலளித்தல் மற்றும் அறிக்கையாக பதிவு அளித்தல் வேண்டும் என்ற விதி சேர்க்கப்பட்டது. இருந்தபோதும், காவல்துறையின் அர்ப்பணிப்பு பற்றாக்குறையாக இருப்பதாலும், பாதிக்கப்பட்டவருக்கு நீதிச் சேவைகள் கிடைக்காதிருப்பதாலும், விரக்தியடைந்துபோகும் பாதிக்கப்பட்டவர்கள் பலரும் குற்றத்தைப் பற்றி புகார் செய்யாமல் போவது நிகழ்வதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. ஒருவேளை குற்றம் பற்றி புகார் தாக்கல் செய்தபோதும், குற்றவியல் நீதி முறை ஏற்படுத்தும் தடங்கல்கள் காரணமாக, புலனாய்வின் போது அல்லது வழக்கு விசாரணையின் போது வழக்கு பலவீனமடைந்து போவது தொடரும் என்ற நிலையே இருக்கிறது.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உதவும் வகையில், வழக்கின் பல்வேறு நிலைகளிலும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை உள்ளடக்கியதாக பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவருக்கான இந்தக் கையேடு தயார் செய்யப்பட்டுள்ளது. குற்றத்தைப் பற்றி புகார் அளிக்க வேண்டாம் என்று பாதிப்புக்கு ஆளான பெண் முடிவு செய்தாலும் கூட மருத்துவ உதவிகள், சட்ட உதவிகள் குறித்த தகவல்கள் அவளுக்குத் தேவைப்படலாம். அவைகள் குறித்து இந்த கேள்வி பதில்களில் கூறப்பட்டுள்ளன. பாலியல் வன்முறை என்பதற்குள்ளும் வன்புணர்ச்சி என்பதற்குள்ளும் எவையெல்லாம் அடக்கம் என்பதையும், அந்த குற்றங்களுக்கு என்ன தண்டனைகள் என்பதையும் உள்ளடக்கிய அட்டவணை ஒன்றும் இந்த ஆவணத்தின் இறுதியில் அளிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தன் உரிமைகள் குறித்து கூடுதல் விழிப்புணர்வு இருக்கும்போது, தனக்கு இழைக்கப்பட்ட குற்றம் குறித்து அவள் புகார் அளிப்பாள் என்றும் வழக்கு நிறைவு பெறும் வரை விடாது போராடுவாள் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

**இந்திரா ஜெய்சிங்** (Indira Jaising)
**நிர்வாக இயக்குனர்**
Lawyers Collective, Women's Rights Initiative

# நன்றி

இந்த ஆவணத்தின் கருத்துருவை உருவாக்கியவர் திருமிகு இந்திரா ஜெய்சிங் ஆவார். அவரின் வழிகாட்டுதலின் கீழ் வழக்கறிஞர்கள் இணைப்புக்குழு – பெண்ணுரிமை முன்முயற்சி எடுக்கும் குழு இந்த ஆவணத்தை தொகுத்துள்ளது.

வழக்கறிஞர் திருமிகு ஆர் கோபால், அவர்கள் தயாரித்து அளித்த குற்றவியல் சட்டம் பற்றிய குறிப்புரையை அடிப்படையாக கொண்டுதான் இந்த ஆவணம் தொகுக்கப்பட்டது. அவருக்கு எங்களின் விசேஷ நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வழக்கறிஞர் இணைப்புக்குழு – பெண்ணுரிமை முன்முயற்சியைச் சேர்ந்த திருமிகு காயத்ரி ஷர்மாவும் திருமிகு மோனலிசாவும் ஆய்வுகளை மேற்கொண்டு இந்த ஆவணத்தைத் தொகுத்தார்கள். திருமிகு ப்ரோதோதி தத்தாவும் திருமிகு பிளாரிசா ஷர்மா நோங்பியுர் அவர்களும் இந்த ஆவணம் வெற்றிகரமாக வெளியிடப்படுவதற்கு உழைத்தவர்கள். குற்றவியல் சட்டம் குறித்து ஆய்வு விவரங்கள் அளித்து திருமிகு மைத்ரி குப்தா பங்காற்றினார்கள்.

பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ ஆய்வு செய்வது, சிகிச்சை அளிப்பதில் மருத்துவ தொழில்முறையாளர்களின் பாத்திரம் பற்றிய எங்கள் புரிதலுக்கு கூடுதல் பங்காற்றிய திருமிகு பத்மா தியோஸ்தலிக்கு நாங்கள் மிகவும் கடமைப் பட்டுள்ளோம்.

மிகக் குறுகிய காலத்தில் இந்த ஆவணத்தை சரிபார்த்து (editing) உதவிய வழக்கறிஞர் M.N.சுமதிக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம். இந்த ஆவணத்தை தயாரிக்க நிதியுதவி அளித்த பிரிட்டிஷ் ஹை கமிஷனுக்கு எங்களது நன்றியை உரித்தாக்கி கொள்கிறோம்.

தங்களின் நேர நெருக்கடிக்கு இடையிலும், இந்த ஆவணத்தை படித்து ஆய்ந்து, சட்ட நுணுக்கத்தில் தவறுகள் இருக்கிறதா என்று, சரிபார்த்து உதவிய மூத்த வழக்கறிஞர் திருமிகு ரெபாக்கா மம்மன் ஜான், மூத்த அரசு வழக்கறிஞர் திருமிகு இஜாஸ் கான், தமிழ்நாடு அரசின் நிரந்தர வழக்கறிஞரும் மத்திய புலனாய்வுத் துறையின் வழக்கறிஞருமான சுப்பிரமணியம் பிரசாத் ஆகியோருக்கு நாங்கள் மிகுந்த நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

வழக்கறிஞர் இணைப்புக் குழுவைச் சேர்ந்த கிரண் சர்மா உஜ்வாலா அளித்த ஆதரவுக்காக நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். இந்தக் கையேடு வெளிவருவதில் வழக்கறிஞர் இணைப்புக் குழு – பெண்ணுரிமை முன்முயற்சி அணியில் உள்ள அனைவரது பங்களிப்பும், நிர்வாக ஆதரவும் உள்ளன. அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். LCWRIயில் தங்கிப் பணியாற்றிய மாணவர்கள் (intern) திருமிகு இராகுல் பஜாஜ் அவர்களுக்கும் திருமிகு அருந்ததி கோபால் அவர்களுக்கும் எங்களின் சிறப்பு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தக் கையேடு தமிழில் வெளிவர ஒருங்கிணைப்பு செய்த ஷீலு, தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு அவர்களுக்கும், மொழியாக்கம் செய்த உஷா அவர்களுக்கும், வடிவமைப்பு மற்றும் அச்சில் உதவிய லாவண்யா மற்றும் ஆர் மீடியா நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# உள்ளடக்கம்


முன்னுரை iii

நன்றியுரை v

1. எந்தெந்த செயல்பாடுகள் பாலியல் வன்புணர்ச்சி மற்றும் பாலியல் வன்முறையில் அடங்கியுள்ளன? 1

2. புலன் கொள்ளக் கூடிய மற்றும் புலன்கொள்ள முடியாத (cognisable and non-cognisable) வழக்குகளுக்கு இடையிலான வேறுபாடு என்ன? 3

3. பிணை வழங்கக் கூடிய மற்றும் பிணை வழங்க முடியாத (bailable and non-bailable) குற்றங்களுக்கு இடையிலான வேறுபாடு என்ன? 4

4. பாலியல் வன்முறை தொடர்பான குற்றம் ஒன்று பற்றி காவல்துறையிடம் புகார் அளிப்பது கட்டாயமானதா? 4

5. ஒரு குற்றத்தைப் பற்றி புகார் செய்வது எப்படி? 4

6. முதல் தகவல் அறிக்கை(FIR) என்றால் என்ன? 5

7. முதல் தகவல் அறிக்கையை ஆவணப்படுத்துவது எப்படி? 5

8. முதல் தகவல் அறிக்கையில் என்னென்ன விவரங்கள் இருக்க வேண்டும்? 7

9. முதல் தகவல் அறிக்கை ஆவணம் செய்யப்பட்ட பின்னர் கூடுதல் விவரங்களை சேர்க்க முடியுமா? 8

10. உடனடியாக நான் காவல்துறையை அணுக முடியாது என்றால் எவ்வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நான் மேற்கொள்ள வேண்டும்? 9

11. என் மீது நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்கும் தனித்தனி முதல் தகவல் அறிக்கையை நான் ஆவணப்படுத்த வேண்டுமா? 10

12. முதல் தகவல் அறிக்கையை காவல்துறை பதிவு செய்யவில்லை என்றால் வேறு என்னென்ன செய்வதற்கு எனக்கு வாய்ப்புள்ளது? 10

13. தனியார் புகார் ஒன்றை பதிவு செய்வது எப்படி? 12

14. காவல்துறை மூடல் அறிக்கை பதிவு செய்தால் நான் என்ன செய்ய முடியும்? 13

15. புலன் விசாரணையின் போது காவல்துறை என்ன செய்யும்? 14

16. மருத்துவ சோதனைக்கு உடன்பட முடியாது என்று மறுத்தும் கூட நான் வழக்கை நடத்த முடியுமா? 16

17. மருத்துவ பரிசோதனையின் போது சான்றுகள் சேகரிப்பதற்காக என்ன செய்யப்படும்? 16

18. எனக்கு மருத்து உதவி வேண்டும். ஆனால், நான் புகார் செய்ய விரும்பவில்லை. அது சாத்தியமா? 18

19. புலன்விசாரணை முடிந்த பின்னர் அடுத்த நடவடிக்கை என்ன? 19

20. என்னால் வழக்கறிஞருக்கு செலவு செய்ய முடியாது. நான் என்ன செய்யலாம்? 20

21. எந்தெந்த சட்ட உத்தரவுகளுக்கு நான் எதிர்ப்புத் தெரிவிக்க முடியும்? 22

22. அரசு வழக்கறிஞரின் (Public Prosecutor) பாத்திரம் என்ன? 22

23. விசாரணையின் போது என்ன நிகழும்? 25

24. சிறார் சாட்சியங்களுக்கு என்று சிறப்பு ஏற்பாடுகள் ஏதும் இருக்கின்றதா? 27

25. நான் வயதுக்கு வந்த பெண். நான் என் கணவனால் வன்புணர்ச்சி/ துஷ்பிரயோகம் செய்யப்பட்டேன். குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005 ல் (The Protection of Women from Domestic Violence Act, 2005) எனக்குள்ள உரிமைகள் என்ன? 30

அட்டவணை 1: இந்திய தண்டணைச் சட்டம் 1860ன் (Indian Penal Code, 1860 ) படியான குற்றங்களும் அவற்றுக்கான தண்டனைகளும் 32

அட்டவணை2: பாலியல் தாக்குதலுக்கு எதிராக குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 ன் (Protection of Children from Sexual Offences Act, 2012) படியான குற்றங்களும் அவற்றுக்கான தண்டனைகளும் 37

அட்டவணை3: குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005ல் (The Protection of Women from Domestic Violence Act 2005) கொடுக்கப்பட்டுள்ள பொருத்தமான சட்ட ஷரத்துக்கள் – பிரிவுகள் 44

அவசரத் தேவைக்கான முக்கிய எண்கள் மற்றும் முகவரிகள் 45

அனைத்து மகளிர் காவல்நிலைய தொலைபேசி எண்கள் 46

மாவட்ட பாதுகாப்பு அதிகாரி பட்டியல் 52

தாலுகா சட்ட சேவைகள் குழு தலைவர்கள் 56

மாவட்ட சட்ட சேவைகள் குழு செயலாளர்கள் 78

## *1. எந்தெந்த செயல்பாடுகள் பாலியல் வன்புணர்ச்சி மற்றும் பாலியல் வன்முறையில் அடங்கியுள்ளன?*

குற்றவியல் (திருத்த) சட்டம் 2013 (Criminal Law (Amendment) Act, 2013 -"CLA Act") இயற்றப்படுவதற்கு முன்பு இந்திய தண்டனைச் சட்டம் 1860 ன் (Indian Penal Code, 1860 (-IPC") பிரிவு 376ன்படி பெண் பிறப்புத் திறப்புக்குள் ஆண் குறியை நுழைப்பதுதான் பாலியல் வன்புணர்ச்சி என்பதாக இருந்தது.

2013ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களைத் தொடர்ந்து பெண் பிறப்புத் திறப்புக்குள் ஆண் குறி நுழைக்கப்படுவது என்ற வரையறைக்குள் அது அடங்கி விடவில்லை. பெண்ணின் ஒப்புதல் இன்றி செய்யப்படும் கீழே கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் அனைத்தும் பாலியல் வன்புணர்ச்சி என்றே கொள்ளப்படும்.

- பெண்ணின் பிறப்புறுப்பு, வாய், சிறுநீர் வெளியேறும் திறப்பு, அல்லது குதத்திற்குள் ஆண் குறியைத் திணிப்பது
- பெண்ணின் பிறப்புறுப்பு, எந்தவொரு முறையற்ற, சிறுநீர் வெளியேறும் திறப்பு, அல்லது குதத்திற்குள் எந்தவொரு பொருளையோ அல்லது உடல் பாகத்தையோ திணிப்பது (உதாரணமாக பெண்ணின் பிறப்புறுப்புக்குள் விரலைத் திணிப்பது)
- பெண்ணின் பிறப்புறுப்பு, எந்தவொரு முறையற்ற, சிறுநீர் வெளியேறும் திறப்பு, அல்லது குதத்திற்குள் நுழைப்பதற்காக பெண்ணின் எந்தவொரு உடல் பாகத்தையோ கையாளுவது அல்லது மற்ற எவருடனும் அவ்வாறு அவள் செய்யும்படி செய்வதும் பாலியல் வன்புணர்ச்சி என்றே கொள்ளப்படும். (உதாரணமாக பெண்ணின் பிறப்புறுப்பு, வாய், சிறுநீர் வெளியேறும் திறப்பு, அல்லது குதத்திற்குள் தனது விரலை விட்டுக்கொள்ளும்படி ஒரு பெண்ணை பலவந்தம் செய்வது அல்லது பிறிதொரு நபருக்கு அவ்வாறு செய்யும்படி அவளைப் பலவந்தம் செய்வது)
- பெண்ணின் பிறப்புறுப்பு, எந்தவொரு முறையற்ற, சிறுநீர் வெளியேறும் திறப்பு, அல்லது குதத்திற்குள் வாயை நுழைப்பது அல்லது, குற்றத்தைச் செய்பவருக்கு அல்லது பிறிதொருவருக்கு அவ்வாறு அவள் வாயைப் பயன்படுத்தும்படி பலவந்தம் செய்வதும் கூட பாலியல் வன்புணர்ச்சி என்றே கொள்ளப்படும்.

**பாலியல் வன்புணர்ச்சி அல்லாத பிற பாலியல் குற்றங்கள்**

- 2013க்கு முன்பு பெண்ணுக்கு எதிரான அனைத்து பாலியல் குற்றங்களும் 'பெண்ணை மானபங்கப்படுத்துதல்' என்பதற்குள் அடக்கப் பட்டிருந்தன. இருந்தபோதும் CLA சட்டத்திற்குள் பல வகையிலான புதிய குறிப்பான குற்றங்கள் நுழைக்கப்பட்டன. பாலியல் துன்புறுத்தல் (Sexual harassment), துயிலுரிக்கும் நோக்கத்துடன் குற்றவகையில் பலவந்தப்படுத்துவது, (பாலுறுப்புகள்/ உடலுறவு கொள்ளுதல் போன்ற நிகழ்வுகளை) மறைந்திருந்து உற்றுப்பார்த்தல் (voyeurism), (துன்புறுத்தும் வகையில்) பின்தொடர்தல் (stalking) போன்றவை சேர்க்கப்பட்ட சில புதிய குற்றங்கள் ஆகும். (இந்திய தண்டனைச் சட்டத்தின் படியான முழுமையான பாலியல் குற்றங்கள் குறித்த அட்டவணைக்கு அட்டவணை 1யைப் பார்க்கவும்).

**தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்:**

- **பாலியல் வன்புணர்வு என்றால் உள் நுழைத்தல் நிகழ்ந்திருக்க வேண்டும். உதாரணமாக, பெண் பாலுறுப்பின் வெளிப்புரத்தை, அவளின் அனுமதியின்றி தொடுவது வன்புணர்ச்சி ஆகாது. மாறாக, தனியானதொரு பாலியல் குற்றமாகக் கருதப்படும்.**

- **மிகச் சிறு அளவுக்கு உள் நுழைக்கப்பட்டிருந்தால் கூட வன்புணர்ச்சி என்றே கருதப்படும். எந்த ஆழத்திற்கு உள்நுழைக்கப்பட்டது என்பது பொருட்டில்லை.**
- **வன்புணர்ச்சி என்று கருதப்பட வேண்டுமென்றால் பெண்குறியின் புறவாய் சவ்வு (கன்னித்திரை என பொதுவாகச் சொல்லப்படுவது) கிழிந்திருக்க வேண்டும் என்பது தேவையில்லை)**
- IPCயின் படி 15 வயதுக்குக் குறைவான பெண்ணாக இல்லாத பட்சத்தில், தனது சொந்த மனைவியுடன் ஒரு ஆண் உடலுறவு கொள்வது அல்லது பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது வன்புணர்ச்சி ஆகாது. இருந்தபோதும், தீங்கிழைக்கப்பட்ட பெண்ணொருத்தி குடும்ப வன்முறைக்கு எதிராகப் பெண்களைக் காக்கும் சட்டத்தின் கீழ், பாலியல் வன்முறை என்று குற்றம் சாட்டி, சிவில் வழக்கொன்றைப் பதிவு செய்யலாம். அல்லது, **15 வயது முதல் 18 வயது வரை உள்ள பெண் என்றால், பாலியல் குற்றங்களுக்கு எதிராக சிறார்களைக் காக்கும் சட்டம் 2012ன் கீழ் பாலியல் குற்றம் என்று வழக்குத் தாக்கல் செய்யலாம்.** (இந்த குற்றங்களுக்கான தண்டனையை அட்டவணைகள் 2 மற்றும் 3 பார்க்கவும்)
- IPC யின் பிரிவு 376Bயின் படி, பிரிந்திருக்கும் மனைவியை, அவளின் ஒப்புதல் இல்லாமல், அவளின் கணவன் உடலுறவு கொள்வது குற்றமாகும். எனவே, (மனைவி சட்டப்படி பிரிந்திருக்கிறார்களா இல்லையா என்பது பொருட்டில்லாமல்) கணவனைப் பிரிந்து வாழும் சமயத்தில் கணவன் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபடடால், அவர் IPCயின் பிரிவு 376Bயின் படி தண்டனைக்குரியவர் ஆவார்.

2012 ல் 18 வயதுக்குக் கீழ்பட்ட சிறார்களுக்கு என்று, பாலியல் குற்றங்களுக்கு எதிராகச் சிறார்களைக் காக்கும் சட்டம் 2012 (The Protection of Children from Sexual Offences Act, 2012" -"POCSO Act") கொண்டுவரப்பட்டது. தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்:

- **POCSO சட்டம் பாலின சார்பற்றதாகும்.** ஆனால், IPCயின் கீழான குற்றங்கள் பாலின குறிப்பு நிலை கொண்டவை. (பிரிவு 377 தவிர இதர சட்ட வாசகங்கள் அனைத்தும் பெண்ணை பாதிப்புக்கு ஆளானவர் என்றும் ஆணைக் குற்றமிழைத்தவர் என்றும் கொள்கின்றன. இதற்கு மாறாக, POSCO சட்டத்தில் ஆண் பெண் என்று இரண்டு பாலினத்தைச் சேர்ந்த சிறார்களும் பாலியல் குற்றங்களுக்கு எதிராகப் பாதுகாக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் . (POCSO வின் படியான குற்றங்களின் பட்டியலுக்கு அட்டவணை 2யைப் பார்க்கவும்)
- **POSCO சட்டத்தின்படி சிறாரின் ஒப்புதல் தொடர்பற்ற ஒன்றாகக் கருத்தப்படும்)**
- **பாதிப்புக்கு ஆளான சிறாருக்கும் வயதுக்கு வந்த குற்றமிழைத்தவருக்கானது** POSCO **சட்டமாகும்.** ஒருவேளை இரண்டு சிறார்கள் பாலியல் உறவில் ஈடுபட்டாலோ அல்லது வயதுக்கு வந்த ஒருவர் மீது சிறார் ஒருவர் பாலியல் குற்றம் புரிந்தாலோ சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000 (Juvenile Justice (Care and Protection of Children) Act, 2000) பொருத்தமான சட்டமாகும்.

- **POCSO சட்டத்தின்படி** ஆண் பெண் என்ற இருபாலரும் குற்றிமிழைத்தவர்களாக கொள்ளப்படுவார்கள். . ஆண் குறியை நுழைத்தல் தொடர்பான இரண்டு குற்றங்கள் ஆண் மட்டுமே செய்ய முடியும். குறிப்பாக:

  - ❖ பிரிவு 3: (அ) ஒருவர், ''தனது ஆண்குறியை எந்த அளவுக்காவது, சிறார் ஒருவரின் பிறப்புறுப்பு, வாய், சிறுநீர் வெளியேறும் துளைஅல்லது குதத்திற்குள் நுழைத்திருந்தால்அல்லது தன்னுடனோ அல்லது பிறிதொரு நபருடனோ செய்யும்படி செய்திருந்தால்'' அவர் உள்நுழைக்கும் பாலியல் தாக்குதல் செய்தவராகக் கருதப்படுவார்.
  - ❖ பிரிவு 3(a)வில் 'பிறிதொரு நபர்' என்ற வார்த்தைகள் பயன்படுத்தியிருப்பதால், அப்பிரிவின் இரண்டாம் பகுதியின்படி , பெண்ணும் கூட குற்றமிழைத்தவராக அல்லது பாதிப்புக்கு ஆளானவராக இருக்கலாம்.
  - ❖ பிரிவு 5(j): "ஒரு பெண் சிறார மீது யாரேனும் உள்நுழைத்தல் பாலியல் வண்புணரவு குற்றம் நிகழ்த்தியதின் விளைவாக அச்சிறாரகருவுற்றால்'' என்று குறிப்பிடுகிறது.

  இருந்த போதும், மேற்சொன்ன இரண்டு குற்றங்களிலும் POCSO சட்டத்தின் பிரிவு 16ன்படி குற்றத்திற்குத் துணை போனவர் என்று பெண்ணை சேர்த்துக்கொள்ள முடியும். லலிதாகுமாரி எதிர் UPஅரசு மற்றும் பலர் 2013 (13 Scale 559

## 2. புலன் கொள்ளக் கூடிய மற்றும் புலன்கொள்ள முடியாத (cognisable and non-cognisable) வழக்குகளுக்கு இடையிலான வேறுபாடு என்ன?

புலன் கொள்ளக் கூடிய குற்றம் என்றால், நீதிமன்ற உத்திரவு இல்லாமல், காவல்துறை புலனாய்வு செய்ய முடியும். குற்றவியல் நடைமுறைச் சட்ட (Code of Criminal Procedure, 1973 -"Cr.P.C") பிரிவு 155(2) ன்படி தேவையான அனுமதியைப் பெற்ற பின்னரே புலன்கொள்ள முடியாத குற்றம் ஒன்று பற்றி புலன் விசாரணை செய்வதற்குக் காவல்துறை அதிகாரம் பெற்றதாகிறது. உதாரணமாக, வன்புணர்ச்சிக்கு ஆளான பெண்ணுக்கு மருத்துவம் செய்யாதது, இந்திய தண்டணைச் சட்டப் பிரிவு 166Bயின் கீழ், புலன் கொள்ள முடியாத குற்றமாகும். எனவே, பிடி ஆணையைப் (warrant) பெறாமல் மருத்துவமனையின் பொறுப்பாளரை காவல்துறை கைது செய்ய முடியாது.

Cr.P.C யின் முதல் அட்டவணை, இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் புலன் கொள்ளத்தக்க குற்றங்கள், புலன் கொள்ள முடியாத குற்றங்கள் என்று குற்றங்களை வகையினப்படுத்துகிறது.

காவல்துறையிடம் அளிக்கப்பட்ட தகவல், புலன் கொள்ளக் கூடிய குற்றம் ஒன்று பற்றியது என்றால், Cr.P.Cயின் பிரிவு 154ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது கட்டாயமானதாகும்.

**பாலியல் வன்புணர்ச்சி புலன் கொள்ளக் கூடிய குற்றமாகும்.** எனவே, புலன் விசாரணையைத் துவக்குவதற்கு நீதிமன்ற உத்தரவு தேவையானதல்ல. மேலும், வன்புணர்ச்சி நிகழ்வுகளில் முதல் தகவல் அறிக்கையை ஆவணப்படுத்துவது கட்டாயமானதாகும்.

## 3. பிணை வழங்கக் கூடிய மற்றும் பிணை வழங்க முடியாத (bailable and non-bailable) குற்றங்களுக்கு இடையிலான வேறுபாடு என்ன?

Cr.P.Cயின் முதல் அட்டவணை IPCயின் கீழான குற்றங்களை பிணை வழங்கக் கூடியவை, அல்லது பிணை வழங்க முடியாதவை என்று வகையினப்படுத்துகிறது.

பிணை வழங்கக் கூடிய குற்றம் என்றால் காவல் துறை அதிகாரி ஒருவர் பிணை வழங்க முடியும். பிணை வழங்க முடியாத குற்றம் என்றால், சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு மட்டுமே பிணை வழங்கும் சிறப்பு அதிகாரம் உண்டு.

பொதுவாக, மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அளிக்கப்படக் கூடிய குற்றங்கள் பலவும் பிணை வழங்கக் கூடிய குற்றங்களாக இருக்கின்றன.

**பாலியல் வன்புணர்ச்சி பிணை வழங்க முடியாத குற்றமாகும்.**

## 4. பாலியல் வன்முறை தொடர்பான குற்றம் ஒன்று பற்றி காவல்துறையிடம் புகார் அளிப்பது கட்டாயமானதா?

POCSO சட்டப் பிரிவு 19(1)ன் படி சிறார்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறித்து உள்ளூர் காவல் நிலையத்திலோ அல்லது சிறாருக்கான சிறப்பு காவல் பிரிவிடமோ புகார் செய்வது அனைத்து நபர்களுக்கும் கட்டாயமானதாகும்.

பாதிக்கப்பட்டவர் வயதுக்கு வந்த பெண் என்றால், தகவலை புகாராக அளிப்பது அனைவருக்கும் கட்டாயமானதல்ல. இருந்தபோதும், Cr.P.C., பிரிவு 357ன்படி, அது போன்ற நிகழ்வுகளை மருத்துவமனைகள் புகாராக அளிப்பது கட்டாயமானதாகும்.

## 5. ஒரு குற்றத்தைப் பற்றி புகார் செய்வது எப்படி?

முதல் தகவல் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்வதன் மூலம் குற்றம் பற்றி நீங்கள் தகவல் அளிக்கலாம்.

---

பிரிவு 19 “குற்றம் குறித்து புகார் செய்தல்” (1) குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 ல் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், இந்த சட்டத்தின் படி குற்றம் என்றான ஒன்று நிகழவிருக்கிறது என்று (சிறார் உட்பட) எந்த ஒருவரும் கருதினாலோ அல்லது நடைபெற்றிருப்பதை அறிந்திருந்தாலோ அத்தகவலை
(அ) சிறாருக்கான சிறப்பு காவல் பிரிவிடம் , அல்லது,
(ஆ) உள்ளூர் காவல் துறையிடம்
அளிக்க வேண்டும்.

சிறார் ஒருவர் அல்லது சிறார்கள் மீதான பாலியல் குற்றம் நிகழ்ந்திருந்தால் POCSO சட்டப் பிரிவு 19ன் கீழ் நீங்கள் உள்ளூர் காவல் நிலையத்திலோ அல்லது சிறாருக்கான சிறப்பு காவல் பிரிவிடமோ புகார் அளிக்கலாம்.

## 6. முதல் தகவல் அறிக்கை என்றால் என்ன?

புலன் கொள்ளத் தக்க குற்றம் ஒன்று நடைபெற்றது என்று அறிந்த எந்தவொரு நபரும் Cr.P.Cயின் பிரிவு 154ன் கீழ், காவல்துறைக்கு அந்த குற்றம் பற்றி அளிக்கும் தகவலே முதல் தகவல் அறிக்கை ஆகும். அது எழுத்து பூர்வமாக அளிக்கப்படலாம். அல்லது காவல் அதிகாரியிடம் வாய் மொழியாகச் சொல்லப்படலாம். தகவல் அளிப்பவர் முதல் தகவல் அறிக்கையில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும் என்றால், குற்றம் பற்றிய உண்மை விவரங்களை காவல்துறையிடம் அளித்திருக்க வேண்டும். நடைமுறைச் சட்டத்தின்படி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்பு காவல்துறை புலன் விசாரணையை துவங்கலாம்.

## 7. முதல் தகவல் அறிக்கையை ஆவணப்படுத்துவதுஎப்படி?

முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யும்போது பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்:

சாத்தியமான அளவுக்கு, குற்றத்தால் பாதிக்கப்பட்டவரே முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும். சட்டப்படி பார்த்தால், புலன் கொள்ளத்தக்க குற்றம் பற்றி போதுமான தகவல் அறிந்த எந்தவொருவரும் முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்யலாம். அறைகுறை அறிவு, செவி வழிச் செய்திகளைச் சொல்வது, அல்லது வதந்திகளைக் குறிப்பிடுவது போதுமான விவரங்களை அளிப்பதாக இருக்காது.

சாதாரணமாக முதல் தகவல் அறிக்கை ஒன்று மட்டும்தான் இருக்கும். அதன் உள்ளடக்கம் விசாரணைக்கு வலுவூட்டுவதாக அமையும். எனவே, சம்பந்தப்பட்ட உண்மை விவரங்கள் அனைத்தையும் அளிப்பதற்காக, பாதிப்புக்கு ஆளான பெண் தானே முதல் தகவல் அறிக்கையை அளிப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

காவல்துறையை அணுகுவதில் தாமதத்தைத் தவிர்க்கவும்: பாலியல் வன்முறைத் தாக்குதல் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் ஏற்படும் தாமதத்தின் காரணமாக உங்கள் வழக்கு தள்ளுபடி ஆகிவிடாது. இருந்தபோதும், குற்றம் நடைபெற்ற உடனேயே காவல்துறையை நீங்கள் அணுக வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்வதில் தாமதம் ஏற்பட்டால் அதற்கான காரணங்களைக் காவல் அதிகாரியிடம் குறிப்பிடுங்கள். குற்றம் பற்றி மிகச் சீக்கிரம் புகார் செய்வது வழக்கை வலுப்படுத்துவதாக அமையும்.

புலன் கொள்ளக்கூடிய குற்றங்களில் முதல் தகவல் அறிக்கையை காவல்துறை பதிவு செய்வது கட்டாயமானது: முதல் தகவல் அறிக்கையைக் காவல் துறை பதிவு செய்வது கட்டாயமானதாகும். நடைபெற்ற குற்றம் புலன் கொள்ளத்தக்க குற்றமா இல்லையா என்பது குறித்து பெறப்பட்ட தகவல் தெளிவானதாக இருக்கிறதா என்பதை காவல்துறை அறிந்துகொள்வதற்கான நேரத்தை மட்டுமே அவர்கள் எடுத்துக்கொள்ள முடியும். அதன் பின் நடைபெற்ற குற்றம் புலன்கொள்ளத் தக்கதா இல்லையா என்பது பற்றி மட்டுமே அவர்கள் துவக்க கட்ட விசாரணை நடத்தலாம்.அதற்கு மேலான சரிபார்த்தலை இந்த கட்டத்தில் காவல்துறை மேற்கொள்ள கூடாது.அதுமட்டுமல்லாமல், (CLA சட்டத்தின்படி உள்நுழைக்கப்பட்ட) IPC பிரிவு 166A. அதே

சட்டத்தின் பிரிவுகள் 326A, 326B, 354, 354B, 370A, 376, 376A, 376B, 376C, 376D, 376E அல்லது 509 கீழான எந்தவொரு குற்றம் குறித்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுக்கும் அல்லது அதுபோன்ற குற்றம் எதனையும் இழைக்கும் காவல் அதிகாரி/ பொதுப் பணியாளர் மீது தண்டனை நடவடிக்கை மேற்கொள்ள வழிவகுக்கிறது. மேலும், 166 Aயின் படி , நடைபெற்ற குற்றத்திற்காக சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிக்கு/ பொது ஊழியர்/ பணியாளருக்கு, குறைந்த பட்சம் 6 மாதம் முதல் 2 ஆண்டு வரை நீளக்கூடிய சிறை தண்டனைக்கும் அத்துடன் அபராதத் தொகை விதிப்பதற்கும் அந்த பிரிவு வழிவகுக்கிறது.

சட்டத்தின் எந்த பிரிவின்படி குற்றம் என்று தெரியாவிட்டாலும் காவல்துறைக்குத் தகவல் அளியுங்கள்: குற்றம் பற்றிய உண்மை விவரங்களைக் காவல் துறைக்கு அளிக்கும்போது, எந்த குறிப்பிட்ட தண்டனைப் பிரிவின் கீழ் அதனைப் பதிய வேண்டும் என்று காவல்துறைக்குத் தெரியும் என்பதால், உங்களுக்கு இழைக்கப்பட்ட குற்றத்திற்கான சட்டப்பிரிவு என்ன என்று தெரிந்துகொள்ள நீங்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

நெருக்கடியான நேரத்தின்போது, குற்றம் புலன்கொள்ளத் தக்கதா இல்லையா என்று நீங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை: புலன் கொள்ளத் தக்க குற்றம் பற்றிய விவரங்களைப் பெற்றுக்கொண்ட பின்பு புலன் விசாரணையை துவங்க வேண்டும் என்ற கட்டாயக் கடமை காவல்துறைக்கு இருக்கிறது என்பதால், அவசரமான நிலையில் குற்றம் புலன்கொள்ளத் தக்கதா இல்லையா என்று நீங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டியது அவசியமில்லை. **உங்களுக்கு நேரம் இருக்கிறது என்றால், தகவல்களை எழுதி காவல்துறையினரிடம் கொடுங்கள். உங்கள் புகாரை ஜெராக்ஸ் பிரதி ஒன்று எடுத்து அதன் மீது பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவ்வாறு செய்வதால் காவல்துறையினரிடம் என்ன தகவல் அளிக்கப்பட்டது என்பது பற்றிய தகராறு எதுவும் பிற்காலத்தில் நேரிடாது.**

அவசர காலத்தின்போது அருகாமையில் உள்ள காவல் நிலையத்தை அணுகுங்கள்: நெருக்கடியான சூழலில், குற்றம் நடைபெற்றது அந்த காவல் நிலையத்தின் எல்லைக்குள் இல்லை என்றாலும் கூட, நீங்கள் அருகாமை காவல் நிலையத்தை அணுகலாம். அப்போது பதியப்படும் முதல் தகவல் அறிக்கையை 'Zero FIR' என்று குறிப்பிடுவார்கள். அதனைத் தொடர்ந்து குற்றம் நடந்த இடத்திற்கான காவல் நிலையத்திற்கு முதல் தகவல் அறிக்கை மாற்றப்படும். இருந்தபோதும், அவசரம் ஏதும் இல்லையென்றால், குற்றம் நடந்த இடத்திற்கான காவல்நிலையத்தை நீங்கள் தொடர்புகொள்வது நல்லது. அது விசாரணை துவங்குவதில் தேவையற்ற கால விரயத்தைத் தவிர்க்க உதவும்.

உடனடி உதவி தேவைப்படும்போது காவல்துறை கட்டுப்பாட்டு அறையைக் கூப்பிடுங்கள்: உங்கள் பாதுகாப்பிற்கு, மருத்துவ உதவிக்கு அல்லது மீட்பு நடவடிக்கைகளுக்காக, உடனடி காவல் துறை உதவி தேவைப்படும் என்றால், நீங்கள் காவல்துறை கட்டுப்பாட்டு அறையை அழைக்க வேண்டுமே தவிர உள்ளூர் காவல் நிலையத்தை அல்ல. கட்டுப்பாட்டு அறையுடன் நீங்கள் பேசுவது பதிவு செய்யப்படும். நெருக்கடியான நிலையின்போது, பாதிக்கப்பட்டவரை பத்திரமாக மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச் செல்ல அல்லது வன்செயலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர காவல் படையொன்று அனுப்பிவைக்கப்படும். மேலும், உள்ளூர் காவல் நிலையத்திற்கும் கட்டுப்பாட்டு அறை தகவல் கொடுக்கும். அதுமட்டுமல்லாமல், உங்கள் அழைப்பிற்கான ஆதாரம் ஒன்றும் கட்டுப்பாட்டு அறையில் இருக்கும். நீங்கள், Cr.P.C,பிரிவு 156(3)ன் கீழ் மனு தாக்கல் செய்தீர்கள் என்றால், உங்கள் புகார் அழைப்பை ஆதாரமாகக் கொண்டு முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்ததற்கும் காவல்துறை புலன்

விசாரணை நடப்பதற்குமான நீதிமன்ற வழிகாட்டுதலை நீங்கள் பெற்றுக்கொள்ள பயன்படும்.

**காவல்துறையின் பயனுள்ள தொடர்பு எண்கள்:**

காவல்துறை கட்டுப்பாட்டு அறை: 100

பெண்களுக்கான காவல்துறை உதவி எண்: 1091

சைல்ட் லைன் (துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் சிறார்களுக்கான உதவி எண்): 1098

முதல் தகவல் அறிக்கை ஒரு பெண் காவல் துறை அதிகாரியோ அல்லது பெண் அதிகாரியோதான் ஆவணப்படுத்தப்பட வேண்டும் : IPC சட்டப் பிரிவுகள் 326A, 326B, 354, 354B, 370A, 376, 376A, 376B, 376C, 376D, 376E அல்லது 509 படியான முதல் தகவல் அறிக்கைகளைக் காவல் துறையின் பெண் அதிகாரி ஒருவரோ அல்லது பெண் அதிகாரி ஒருவரோ ஆவணப்படுத்த வேண்டும். அவ்வாறு ஆவணப்படுத்தும் நிகழ்வை வீடியோ பதிவும் செய்து வைக்க வேண்டும்.

நீங்கள் மாற்றுத் திறனாளி என்றால்: தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக மன ரீதியாக அல்லது உடல் ரீதியாக மாற்றுத் திறனாளியாக உள்ள ஒருவரின் மீது குற்றம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்றால், அந்த நபரின் வீட்டிலோ அல்லது அவருக்கு வசதியானதென்று அவர் தேர்ந்தெடுக்கும் ஒரு இடத்திலோ, பாதிக்கப்பட்டவருக்கு உதவியாக விளக்கமளிக்கும் நபர் அல்லது சிறப்புக் கல்வியாளர் ஒருவரின் இருத்தலின் போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும்.

## 8. முதல் தகவல் அறிக்கையில் என்னென்ன விவரங்கள் இருக்க வேண்டும்?

(அ) சம்பவம் நடந்த தேதி, (ஆ) நேரம், (இ) இடம் ஆகியவை மிகச் சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். குற்றம் உடல் தொடர்பானது என்றால், காயத்திற்கு ஆளான உடல் உறுப்பு/கள், பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், குற்றவாளி/ குற்றவாளிகள் தெரிந்தவர்கள் என்றால் அவரின்/ அவர்களின் பெயர்/ பெயர்கள், குற்றத்தை நேரில் கண்டவர்/ கண்டவர்களின் பெயர்கள் போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். அதுபோன்ற விவரங்கள் உங்களை மருத்துவப் பரிசோதனை செய்யும்போதும், குற்றமிழைத்தவரை பரிசோதனை செய்யும்போதும் மேலும் வலுகொண்டவையாக மாறும்.

**பெயர் தெரியாத குற்றவாளிகள் என்றால் அவர்களை இனம் கண்டுகொள்வதற்குத் தேவையான விவரங்கள் இருக்கும் என்றால் அவை அனைத்தையும் அளிக்க வேண்டும்.** உதாரணமாக, வயது, பாலினம், உடல் தோற்றம் அல்லது அடையாளம் கண்டுகொள்வதற்கு உதவியாக உடல் அல்லது முகத்தில் உள்ள அடையாளங்கள் இன்ன பிற, அல்லது பேச்சு வழக்கின் தன்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதுபோல, அறியப்படாத நபர்கள் யாரேனும் குற்றத்திற்கு சாட்சியமாக இருந்திருப்பார்கள் என்றால், அந்த நபரை இனம் காண்பதற்கான அடையாளங்கள் குறிப்பிடப்பட வேண்டும். புலன் விசாரணையின் போது காவல்துறையினர் அந்த விவரங்களை மேலும் வலுப்படுத்துவதைச் செய்வார்கள். குற்றமிழைத்தவருக்கு எதிராக

தண்டனை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதல் தகவல் அறிக்கையில் வலியுறுத்தியிருக்க வேண்டும்.

- காவல் துறைக்கு உதவத் தயாராக இருக்கிறீர்கள் என்பதைக் காட்டும் வகையில் உங்கள் முகவரி, கைபேசி எண் உள்ளிட்ட விவரங்களை அளிக்க வேண்டும்.
- குற்றம் சாட்டப்பட்டவர் பற்றிய முழு விவரங்களும் கிடைக்கும் என்றால், அவரின் அடையாளத்தை நிறுவுவதற்காக காவல்துறையிடம் அளிக்கலாம். ஆனாலும், அவரைக் கண்டுபிடிப்பதற்கான, கைது செய்வதற்கான தகவல்கள் முதல் தகவல் அறிக்கையின் அங்கமாக இருப்பது அவசியமில்லை.
- அவசரமான நேரத்தின்போது தண்டனைக்கான குற்றப் பிரிவுகளை நீங்கள் குறிப்பிட வேண்டியது அவசியமில்லை: உங்களுக்கு தண்டனைக்கான சட்டப் பிரிவிகள் தெரியும் என்றால், அவற்றை முதல் தகவல் அறிக்கையில் சேர்ப்பதற்காக நீங்கள் காவல் துறையிடம் அவற்றைக் குறிப்பிடலாம். உங்களுக்கு கால அவகாசம் இருந்து, வழக்கறிஞர் ஒருவரை அல்லது சட்ட உதவியை, காவல் நிலையம் போவதற்கு முன்பு பெற முடியும் என்றால், நீங்கள் மேற்சொன்ன விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இருந்த போதும் தண்டனை சட்டப் பிரிவுகள் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லை என்பதுடன், அதுபோன்ற விவரங்களைத் திரட்டுவதற்காக நீங்கள் கூடுதல் காலம் எடுத்துக் கொள்ளக் கூடாது. தண்டனைக்கான சட்டப் பிரிவுகளைக் கொண்டுவருவதற்கான அடிப்படை உங்களின் முதல் தகவல் அறிக்கையில் உள்ள உண்மை விவரங்கள்தான். உங்கள் புகார் அறிக்கை முழுமையானதாக இருக்கிறது என்றால், காவல்துறை அதிகாரி அந்த வேலையைப் பார்த்துக்கொள்வார். அல்லது, சம்பந்தப்பட்ட குற்றம்சாட்டப்பட்டவரை காவலுக்கு அனுப்பும் நீதிபதியும் கூட சரியானதும் முழுமையானதுமான சட்டப் பிரிவுகளை சேர்த்துக்கொள்வார்.
- **முதல் தகவல் அறிக்கையில் இட்டுக் கட்டி விவரங்களைச் சேர்க்காதீர்கள், அல்லது தவறான கூற்றுகளைச் சேர்க்காதீர்கள். விசாரணையின் போது உங்களிடமும் குறுக்கு கேள்விகள் கேட்கப்படும். இட்டுக் கட்டல் செய்திருந்தாலோ, அல்லது தவறான கூற்றுகள் இருந்தாலோ அது உங்கள் வழக்கிற்கு எதிராக அமையும்.**
- உங்கள் முதல் தகவல் அறிக்கை எளிய, தெளிவான மொழியில் எழுதப்பட்டிருப்பதை உறுதி செய்யுங்கள். நீங்கள் முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்த பின்னர், உங்கள் கூற்றில் ஏற்படும் சிறிய மாறுதல் கூட முரண்பாடுகளைக் கொண்டுவரக் கூடும் என்பதால், உங்கள் முதல் தகவல் அறிக்கை விரிவான உண்மை விவரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

## 9. முதல் தகவல் அறிக்கை ஆவணம் செய்யப்பட்ட பின்னர்கூடுதல் விவரங்களை நான் சேர்க்க முடியுமா?

குற்றம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் உங்களின் முதல் தகவல் அறிக்கை உள்ளடக்கி இருக்கவில்லை என்றால், ஏற்கனவே நீங்கள், Cr.P.C. சட்டத்தின் பிரிவு 164 படி அளித்த கூற்றுகளுக்கு அப்பால், நடைபெற்ற சம்பவம் குறித்த முழுமையான மற்றும் விரிவான விவரங்களை அளிப்பதற்காக, Cr.P.C சட்டப் பிரிவு 161ன் கீழ், உங்கள் கூற்றினை நீங்கள் பதிவு செய்ய முடியும்.

குற்றம் குறித்த மிகச் சரியான விவரங்களைக் கொண்டிராத முதல் தகவல் அறிக்கையைச் சரிசெய்வதற்கான வழி எதுவும் சட்டத்தில் இல்லை. உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தை அணுகி, Cr.P.C சட்டப் பிரிவு 482ன் கீழ் நீதிமன்றங்களுக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, குறுக்கீடு செய்து நீதியை நிலைநாட்டும்படி கோரலாம். இதுபோன்ற முறையில் முதல் தகவல் அறிக்கையில் உள்ள குறைபாடுகளைக் களைய முயற்சி செய்வது செலவு பிடிப்பதாகவும், கூடுதல் காலம் எடுப்பதாகவும் இருக்கும்.

அதுபோன்ற சமயங்களில் தனது உரிமை பாதிக்கப்பட்ட அந்தப் பெண்மணி உயர் போலீஸ் அதிகாரியைத் தொடர்பு கொள்ளலாம். அந்த உயர் அதிகாரி பின்வருவனவற்றைச் செய்யலாம்:

(அ) சரிசெய்வதற்கான தேவை ஏதும் இருக்கிறதா என்ற பரிசீலிக்கலாம் ;

(ஆ) முதல் தகவல் அறிக்கையில் உள்ள விடுபாடு அல்லது குறையின் காரணமாக ஏற்பட வாய்ப்புள்ள பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் புலன் விசாரணையை நடத்தும்படி கீழ் அதிகாரிக்கு உத்தரவிடலாம்;

(இ) புலனாய்வு செய்யும் அதிகாரிக்கு புலன் விசாரணை பற்றிய தன் அனுபவத்தை நடைமுறைக்கு ஏற்றார் போல சொல்லலாம்;

(ஈ) சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்பு முறையின் மீது பாதிக்கப்பட்டவரின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யலாம்.

Cr.P.Cயின் பிரிவு 161ன் கீழ் நீங்கள் அடுத்து அளிக்கும் கூற்றில், உங்கள் முதல் தகவல் அறிக்கையில் அளிக்கப்பட்ட அம்சம் ஒன்றை நீங்கள் மேலும் விவரித்துச் சொல்ல முடியும். ஆனால், முதல் தகவல் கூற்று ஒன்றினை நீங்கள் மாற்றிச் சொல்லவோ சரிசெய்யவோ முடியாது.

## 10. உடனடியாக நான் காவல்துறையை அணுக முடியாது என்றால் எவ்வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நான் மேற்கொள்ளலாம்?

காவல்துறையை உடனடியாகத் தொடர்பு கொள்வதில்லை என்று நீங்கள் முடிவு செய்தால், குற்றம் குறித்த பொருத்தமான உண்மை விவரங்கள் அனைத்தும் உங்கள் நம்பிக்கைக்குரிய அல்லது மிக நெருக்கமான ஒருவருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

காவல்துறையை உடனடியாகத் தொடர்பு கொள்வதில்லை என்று நீங்கள் தீர்மானித்தால் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

- முதல் வேலையாக குற்றம் குறித்த எழுத்து பூர்வமான ஆவணம் ஒன்றை நீங்கள் தயார் செய்ய வேண்டும். குற்றம் குறித்து எதிர்காலத்தில் நீங்கள் சட்ட நடவடிக்கை மேற்கொள்வது என்று தீர்மானித்தால், மிக முன்னதாகத் தயார்செய்யப்பட்ட குற்றம் குறித்த ஆவணத்தை நீங்கள் முன்வைக்கலாம் என்பதால் இது முக்கியமானதாகும். எழுத்து பூர்வமான முன்னதாகத் தயார் செய்யப்பட்ட ஆவணத்தை நீங்கள் முன்வைப்பதால் நடந்த எவற்றையும் நீங்கள் மாற்றிச் சொல்லவில்லை என்பது உறுதிப்படும்.
- குற்றம் நடந்த விதம் மற்றும் விவரங்களை, தேதி, நேரம் அவற்றுடன் மிகச் சாரமான உண்மை விவரங்களை நீங்கள் ஆவணப்படுத்த வேண்டும்.
- சம்பவம் குறித்து எழுதப்பட்ட இந்த அறிக்கையை இ மெயில், தந்தி, அல்லது தபால் மூலம் உங்கள் உறவினர் அல்லது நண்பருக்கு அனுப்பி வைப்பது சிறந்தது.

- குற்றம் குறித்த எழுத்து பூர்வமான ஆவணத்தைத் தயார் செய்வது சாத்தியம் இல்லை என்றால், நேரடியாகவோ தொலைபேசி அல்லது கைபேசி மூலம் உறவினர் அல்லது நண்பருக்கு அந்தத் தகவல்களை சொல்லுங்கள்.
- உங்கள் உடலில் கண்ணுக்குத் தெரியும் வகையில் காயங்கள் இருந்தால், நீங்கள் மருத்துவச் சோதனைக்கு உட்படவில்லை என்றால், அந்த காயத்தைப் புகைப்படம் எடுத்துக்கொள்ளுங்கள். புகைப்படம் எடுக்கப்பட்ட நாளை சாட்சியம் செய்வதற்குத் தோதாக புகைப்படத்திலேயே பதிவு செய்துகொள்ள வேண்டும். உதாரணமாக, அன்றைய தினம் வெளியான தினப்பத்திரிகையைக் காயத்தின் அருகே வைத்து அதன் தேதி பதிவாகும்படி புகைப்படம் எடுக்கலாம். அந்தப் படத்தின் நெகட்டீவ், அல்லது மின் பிரதியைப் பத்திரப்படுத்துங்கள்.

## 11. என் மீது நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்கும் தனித்தனி முதல் தகவல் அறிக்கையை நான் ஆவணப்படுத்த வேண்டுமா?

இல்லை. ஒரு முறை நிகழ்ந்த தாக்குதலின்போது நிகழ்த்தப்பட்ட அனைத்து குற்றங்களையும் ஒன்றாக ஆவணப்படுத்தி அவற்றையெல்லாம் சேர்த்து புலானாய்வு செய்யலாம். உதாரணமாக, அச்சுறுத்தலும், பாலியல் வன்புணர்ச்சியும் ஒரே சமயத்தில் நிகழ்ந்திருக்கும்.

ஒரே சமயத்தில் நிகழ்த்தப்பட்ட குற்றங்களில் ஒன்றுதான் புலன்கொள்ளத்தக்கது என்கிறபோதும், அனைத்து குற்றங்களையும் ஒரே முதல் தகவல் அறிக்கையில் ஆவணப்படுத்துவது அனுமதிக்கத் தக்கதே. அந்தக் குற்றத்திற்கு தூண்டுதலாக இருத்தல், முயற்சி, அல்லது சதிச் செயலையும் கூட ஒரே முதல் தகவல் அறிக்கையின் அங்கமாக புலன் விசாரணை செய்யலாம்.

## 12. முதல் தகவல் அறிக்கையை காவல்துறைபதிவு செய்யவில்லை என்றால்என்னென்ன செய்வதற்கு எனக்கு வாய்ப்புள்ளது?

CLA சட்டம் இயற்றப்பட்ட பின்னர், இந்திய தண்டனைச் சட்டத்தில் 166A என்னொரு பிரிவு உள்நுழைக்கப்பட்டது. அந்த பிரிவின்படி பாலியல் குற்றம் பற்றிய முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய மறுக்கும் அதிகாரி தண்டனைக்குரியவர் ஆவார். ஆறு மாதத்துக்குக் குறையாத அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அத்துடன் அபராதத் தொகையும் தண்டனையாக அவருக்கு விதிக்கப்படலாம்.

அது ஒருபுறம் இருக்க, நீங்கள் புகார் அளித்த பின்னும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால், தங்கள் முடிவு பற்றி, அவர்கள் உங்களுக்கு உடனே தெரிவிக்க வேண்டும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் நீங்கள் பின்வருவனவற்றைச் செய்யலாம்:

(அ) உயர் அதிகாரியைத் தொடர்பு கொள்ளுங்கள்: காவல் நிலையத்தின் அலுவலர் அளிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய மறுத்தால் Cr.P.C பிரிவு 154 (3)ன்

படி, காவல்துறை காண்காணிப்பாளரை அணுகலாம். நீங்கள் அளிக்க வேண்டிய தகவல்களின் சாரத்தை எழுதி தபால் மூலம் அனுப்பிவைக்கலாம். அந்த அலுவலர் வழக்கை விசாரிக்கலாம் அல்லது தனக்கு கீழ் உள்ள அலுவலர் ஒருவரை விசாரிக்கும்படி உத்தரவிடலாம். நீங்கள் காவல்துறை கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து உங்களின் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தப் பாருங்கள்.

(ஆ) காவல்துறை புலானாய்வு செய்ய வேண்டும் என்று நீதிமன்ற வழிகாட்டுதல் பெறுதல்: காவல்துறை அறிக்கையில் கண்டுள்ள ஒரு குற்றவாளியின் மீது தண்டனை நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் கொண்ட குற்றவியல் நடுவர், சம்பந்தப்பட்ட உள்ளூர் காவல்துறை வழக்கை விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிடலாம். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 2 (d) யில் சொல்லியுள்ள பொருளில், பாதிப்புக்கு ஆளானவர் குற்ற வழக்கை நடத்தும் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டு, தனியார் புகார் ஒன்றை நடுவர் முன்பு தாக்கல் செய்து குற்றவாளியின் மீது தானே தண்டனை நடவடிக்கையைத் துவக்கலாம். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான ð Cr.PC சட்டத்தின் பிரிவு156(3) படியான முன்னிபந்தனை யான புலம் கொள்ளத் தக்க குற்றம் ஒன்று நடந்திருக்க வேண்டும் என்பதுதான். நடுவரிடம் தாக்கல் செய்யப்படும் மனுவின் உள்ளடக்கம், அந்த மனு ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், முதல் தகவல் அறிக்கையாக மாற்றிக்கொள்ளப்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, மனு தாக்கல் செய்யப்பட்டது வரையிலான குற்றம் தொடர்பான அனைத்து விவரங்களும் மேற்படி மனுவில் கொடுக்கப்பட வேண்டும்.

- புலனாய்வு செய்ய வேண்டும் என்ற புலன்கொள்வதற்கு முன்பு கொடுக்கப்படும் வழிகாட்டுதல்

குற்றவியல் நடுவர் ஒருவர், குற்றத்தைப் புலன் கொள்வதற்கு முன்பு Cr.P.C சட்டத்தின் பிரிவு 156(3)படிதனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி காவல்துறை புலானாய்வு செய்ய வேண்டும் என்றோ அல்லது புலனாய்வுக்காக தேடுதல் ஆணையையோ வழங்கலாம்.

- Cr.P.C சட்டத்தின் பிரிவு202ன் படி குற்றம் புலன் கொள்ளப்பட்ட பின்பு விசாரணைக்கு உத்தரவிடுதல்

Cr.P.C சட்டத்தின் பிரிவு 190ன் கீழ் குற்றத்தைப் புலன் கொள்ளுதலை குற்றவியல் நடுவர் மேற்கொள்வார் என்றால் அவர் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்: (அ) நிகழ்வுப் போக்கைத் தள்ளி வைத்துவிட்டு தானே அந்த அந்த வழக்கை விசாரிக்கலாம். (ஆ) காவல்துறை அதிகாரி புலனாய்வு செய்ய வேண்டும் என்று உத்தரவிடலாம். (இ) வேறு யாராவது புலன் விசாரணை செய்யலாம் என்று உத்தரவிடலாம்.

- **இருந்தபோதும், (IPC சட்டப் பிரிவு 375 அல்லது 376ன் கீழான வன்புணர்ச்சி வழக்குகள் போல) வழக்கை அமர்வு நீதிமன்றம் ஒன்றுதான் விசாரிக்க முடியும் என்றால், புலன் கொள்ளப்பட்டதற்குப் பின்பு காவல்துறை விசாரணைக்கு நடுவர் உத்தரவிட முடியாது.**

(இ) CBI புலனாய்வு அல்லது புலனாய்வு அலுவலரை மாற்றுதல்: குற்றம் சாட்டப்பட்டவர் காவல்துறை அதிகாரி என்றால் / அல்லது சம்பந்தப்பட்ட உள்ளூர் காவல் நிலையத்தில் பணியாற்றுபவர் என்றால், அல்லது கடந்த கால அனுபவங்களிலிருந்து அவர் சுதந்திரமாகச் செயல்பட மாட்டார் என்று தெரிந்திருந்தால், இந்திய அரசியல் சட்டத்தின் 226வது பிரிவின்படி , உயர் நீதிமன்றம் புலனாய்வு அதிகாரியையோ அல்லது புலனாய்வு அமைப்பையோ மாற்றம் செய்து உத்தரவிடலாம். வேறு வகையில் நியாயமான புலன் விசாரணை சாத்தியமில்லை

என்பதற்கான அடிப்படை ஆதாரம் வழங்கப்பட முடியும் என்றால், மத்திய புலனாய்வு அமைப்பின் (Central Bureau of Investigation -"CBI") விசாரணை நடைபெற வேண்டும் என்ற உத்தரவும் அளிக்கப்படலாம்.

**புலன்கொள்ளத் தக்க குற்றம் ஒன்று காவல்துறையிடம் புகார் செய்யப்படும்போது முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வது கட்டாயம் என்றாலும் கூட, அதனைப் பதிவு செய்வதற்கான வழிமுறைகள் பின்பற்றப்படாமல் போகலாம். எனவே, பின்வரும் விஷயங்களை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்:**

- **முதல் தகவல் அறிக்கையின் இறுதியில் நீங்கள் கையெழுத்து இடுங்கள்.** ஒருவேளை படிப்பறிவில்லாதவர் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்கிறார் என்றால், என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவருக்குப் படித்துக் காட்டுங்கள்.
- **காவல் நிலையத்தின் பொறுப்பில் உள்ள அதிகாரி தனது பெயரையும், பதவிப் பொறுப்பையும் முதல் தகவல் அறிக்கையில் பதிக்க வேண்டும்.**
- **முதல் தகவல் அறிக்கையின் நகல் ஒன்றை உங்களிடம் வைத்துக்கொள்ளுங்கள்.**

## *13. தனியார் புகார் ஒன்றை பதிவு செய்வது எப்படி ?*

தனியார் புகார் ஒன்றைத் தாக்கல் செய்யும்போது பின்வரும் விஷயங்களை மனதில் கொள்ள வேண்டும்:

- பொது ஊழியர் எவரும் தனியார் புகார் ஒன்றைத் தாக்கல் செய்யலாம்: அமர்வு நீதிமன்றம் ஒன்று அல்லது POCSO சட்டத்தின் படியான சிறப்பு நீதிமன்றம் ஒன்று பொது ஊழியர் ஒருவர் தனது அதிகாரபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்காக, தாக்கல் செய்யும் மனுவை புலன் கொள்ளுதல் செய்யலாம்.
- நண்பர் அல்லது உறவினர் ஒருவர் தனியார் புகார் ஒன்றைத் தாக்கல் செய்யலாம்: பாதிக்கப்பட்டவரே மனுதாரராக இருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. தேவையான அளவு வழக்கு பற்றி விவரம் தெரிந்த, தேவையான ஆதாரங்களைக் கைவசம் வைத்துள்ள, பாதிக்கப்பட்டவரின் நண்பரோ உறவினரோ புகார் செய்யலாம். பாதிக்கப்பட்டவர் ஒரு சாட்சியமாக நீதிமன்றம் வருவது போதுமானது. சாட்சியம் அளிப்பதைத் தவிர, அவர் புகார்தாரர் என்ற முறையிலான எந்த சட்டக் கடமையையும் நிறைவேற்ற வேண்டியதில்லை.
- உள்ளூர் காவல் நிலையத்தினர் என்ன பதில் வினையாற்றினார்கள் என்பது கூறப்பட வேண்டும்: மனுதாரர் உள்ளூர் காவல் நிலையத்தை அணுகியிருந்து அவர்கள் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய மறுத்திருந்தால் அதனைக் குறிப்பிட வேண்டும்.
- காவல்துறையை அணுகியிருக்கவில்லை என்றால்: நியாயமான காவல்துறை விசாரணை சாத்தியம் இல்லை என்று நீங்கள் சந்தேகப்படும்போது, ஏன் அப்படி கருதுகிறீர்கள் என்பதற்கான குறிப்பான காரணத்தை மனுவில் குறிப்பிடவும் (உதாரணமாக, உள்ளூர் காவல்துறை ஆய்வாளர் குற்றவாளியின் நண்பர்.)
- அதிகார எல்லை: நடுவர் நீதிமன்றத்தின் அதிகார எல்லை எது என்பது பற்றி தெளிவாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். குற்றம் நடந்த இடம் எந்த நடுவர் நீதிமன்றத்தின்

எல்லைக்குள் வருகிறது என்று சம்பந்தப்பட்ட உள்ளூர் காவல்துறை அதிகாரி யாரிடமும் நீங்கள் இந்த விவரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- புலன் கொள்ளத் தக்க குற்றம் நடந்திருக்கிறது என்று முறையீடு செய்ய வேண்டும்: புலன் கொள்ளத் தக்க குற்றம் ஒன்று நடந்திருக்கிறது என்று மனுவில் மிகத் தெளிவான உறுதிக் கூற்று இருக்க வேண்டும். மேலும், அதற்கான ஆதாரங்களை மனுவுடன் இணைக்க வேண்டும்.

- பிரமான வாக்குமூலம்: Cr.P.C சட்டத்தின் பிரிவு 156 (3)ன்படி, மனுதாரரின் அல்லது சாட்சியங்களின் வேறு எந்த கூற்றையும் பதிவு செய்யாமல், மனுவினை உள்ளூர் காவல்துறையினர் புலன் விசாரணை செய்ய வேண்டும் என்று நடுவர் முடிவெடுக்கும்போது, உங்கள் மனுவிற்கு ஆதரவாக, அதன் உள்ளடக்கத்தின் உண்மைத் தன்மையை நீதிமன்றத்திற்கு உறுதி செய்யும் வகையில், பிரமான வாக்கு மூலம் ஒன்றையும் நீங்கள் அளிக்க வேண்டும்.

- தண்டனை நடவடிக்கை மேற்கொள்பவர் (prosecution) வழக்கை முழுதும் வெளிப்படுத்த வேண்டும்: தண்டனை நடவடிக்கை கோருபவர் தன் வழக்கின் முழு விவரத்தையும் புகாரில் குறிப்பிட வேண்டும். முதல் தகவல் அறிக்கையில் சொல்வதைக் காட்டிலும் கூடுதல், விரிவான செய்திகளை இணைக்க வேண்டும். தண்டனை நடவடிக்கை கோருபவர் புலன்கொள்ளத்தக்க குற்றம் நிகழ்ந்ததை வெளிப்படுத்த வேண்டும். மேலும், வழக்கின் எந்த பகுதி எந்த சாட்சியத்தால் நிரூபணம் செய்யப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

- சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் பட்டியல்: சாட்சியங்களை விசாரணைக்கு அழைப்பதற்காகவும், ஆவணங்களைப் பரிசீலனை செய்வதற்காகவும் (1) சாட்சியங்கள் (2) ஆவணங்கள் என்ற இரண்டு பட்டியல்களை வழக்கிற்கு ஆதாரமாக நடுவர் முன்பு தாக்கல் செய்ய வேண்டும்.

## 14. காவல்துறை மூடல் அறிக்கை பதிவு செய்தால் நான் என்ன செய்ய முடியும்?

புலன் விசாரணை நிறைவுபெறும்போது, Cr.P.C, சட்டப் பிரிவு 169ன் கீழ் மூடல் அறிக்கையோ அல்லது Cr.P.C பிரிவு 173ன் கீழ் குற்றப்பத்திரிகையையோ காவல் துறை தாக்கல் செய்யும். வழக்கை மூடுவதாக காவல் துறை தாக்கல் செய்யும் அறிக்கையே மூடல் அறிக்கை (closure report) என்று குறிப்பிடப்படுகிறது.

புலன் விசாரணையின் பின்பு காவல்துறை இறுதி அறிக்கை/ மூடல் அறிக்கை தாக்கல் செய்யும். அந்த அறிக்கையை ஒப்புக்கொள்ள அல்லது எதிர்ப்புத் தெரிவிக்க உங்களுக்கு உரிமை உண்டு. மூடல் அறிக்கை தாக்கல் செய்யப்படும்போது, அமர்வு நீதிமன்றமோ அல்லது சிறப்பு நீதிமன்றமோ முதல் தகவல் அளித்தவருக்கு ஓர் அறிவிக்கையை அனுப்பி வைக்க வேண்டும். அந்த அறிவிக்கையைப் பெற்றுக்கொண்டு மூடல் அறிக்கையை ஏற்க மறுத்து காவல்துறையின் கூற்றுகளை நீங்கள் எதிர்க்கலாம்.

- **எதிர்ப்புத் தெரிவிக்கும் உங்கள் மனுவோடு பிரமான சாட்சியம் ஒன்றையும் இணைத்து உங்கள் வழக்கை வலுப்படுத்துங்கள். உதாரணமாக, நீங்கள் தனியார் மருத்துவரிடம் சிகிச்சை பெற்றிருந்தால் அவரின் அறிக்கையை உங்கள் பிரமான வாக்குமூலத்துடன் இணைக்கலாம்.**

நீதிமன்றம் பின்வருவனவற்றை செய்யக் கூடும்: (அ) மூடல் அறிக்கையை ஏற்றுக்கொள்ளலாம். (ஆ) குற்றத்தைப் புலன் கொள்ளலாம் (இ) புலன் விசாரணையை மேலும் தொடர வேண்டும் என்று உத்தரவிடலாம்.

ஒரு வேளை நீதிமன்றம் குற்றத்தைப் புலன் கொள்ளவில்லை என்றால், Cr.P.C பிரிவு 397ன் கீழ் மீளாய்வு மனுவை நீங்கள் தாக்கல் செய்யலாம்.

## 15. புலன் விசாரணையின் போது காவல்துறை என்ன செய்யும்?

குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்வதற்கு முந்தைய கட்டம் புலன் விசாரணைக் கட்டம் என்று குறிக்கப்படுகிறது. Cr.P.Cயின் அத்தியாயம் 12 புலன் விசாரணைக் கட்டத்தில் என்ன செய்யப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது.

தண்டனை வழங்கக் கோரி புகார் செய்த பின்னர், விசாரணையின் முடிவில் குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், தனியார் புகார் வழக்கில், புகார் அளித்தருக்கு உதவும் வகையில் Cr.P.C பிரிவு 202(1)ன்படி நீதிமன்ற நடுவர் உத்தரவு ஒன்றை வழங்குவார்.

புலன் விசாரணைக் கட்டத்தின் முக்கியமான நடவடிக்கைகள் பின்வருமாறு:

(அ) தாக்குதலுக்கு ஆளானவரை, தேவைப்பட்டால் குற்றம் சாட்டப்பட்டவரையும், மருத்துவ சோதனைக்கு உட்படுத்துவது;

(ஆ) Cr.P.C பிரிவு 161ன்படி சாட்சியங்களின் கையொப்பம் இடப்படாத கூற்றுகளை ஆவணப்படுத்துவது . உங்களின் கூற்றை ஆவணப்படுத்தும்போது முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளவற்றை நீங்கள் மேலும் விரிவாகக் கூறலாம்.

(இ) குற்றம் சாட்டப்பட்டவரை க் கைது செய்வது, குற்றத்துடன் சம்பந்தப்பட்ட பொருட்களைக் கைப்பற்றுவதற்காக தேவைப்பட்டால். விசாரணைக் காவல் எடுத்து விசாரிப்பது;

(ஈ) Cr.P.C, பிரிவு 164ன் படி சாட்சியங்களின் கூற்றுகளை நடுவர் ஒருவர் முன்பதிவு செய்ய. இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 354, 354A, 354B, 354C, 354D, துணைப் பிரிவுகள்(1) அல்லது (2), பிரிவு 376, 376 A, 376B, 376D, 376E, அல்லது 509, கீழான குற்றங்களில் சட்டப் பிரிவு 161ன் பிரிவின் கீழ் அவர்களின் கூற்றுகள் உறுதி செய்யப்படுவதற்காக நடுவர் முன்பு சாட்சியங்களின் கூற்றைப் பதிவு செய்வது கட்டாயமானதாகும். Cr.P.C சட்டப் பிரிவு 161ன் கீழ் நீங்கள் அளித்த கூற்றுக்கு முரண்படுவதாக Cr.P.C 164ன் கீழ் நீங்கள் அளிக்கும் கூற்று இருக்கக் கூடாது. உங்களுடைய எதிரியின் வழக்கறிஞர் உங்களின் மேற்படி இரண்டு கூற்றுகளுக்கிடையில் முரண்பாடுகள் இருப்பதாகக் காட்டி உங்கள் வழக்கை உடைக்க முயற்சி செய்வார் என்பதால் கூற்றுகளைப் பதிவு செய்யும்போது மிகத் தெளிவாக இருங்கள்.

(உ) குற்றத்தை ஊர்ஜிதம் செய்யும் பொருட்களை/ ஆவணங்களைக் கைப்பற்றுதல்

(ஊ) தேவையான முன்னெச்சரிக்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, எந்தெந்த பொருட்களை தடயவியல் சோதனைக்கு அனுப்ப வேண்டுமோ அவற்றை அனுப்பி வைத்து நிபுணர் கருத்துரையைப் பெற்று , காவல்துறையின் அறிக்கையுடன் அவற்றை நீதிமன்றத்தின் முன்பு சமர்ப்பித்தல்

(ஏ) சில சமயம் குற்றம் சாட்டப்பட்டவர், தானே முன்வந்து Cr.P.C பிரிவு 164ன்படி நடுவர் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கலாம். குற்றவாளி மற்றும் அவருடன் கூட்டாக விசாரிக்கப்படும் குற்றவாளிகளுக்கும் எதிராக குற்றம் சுமத்தும் சாட்சியத்தின் ஓர் அங்கமான அதனை பிற சான்றாதாரங்களுடன் இணைத்து விசாரிப்பர்.

சில குற்றங்களில் பின்வரும் விசேஷமான நடைமுறைகள் பின்பற்றப்படும் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்:

- பிரிவு 161ன் சீழ் பெண் காவல் அதிகாரியின் கூற்று: இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 354, 354A, 354B, 354C, 354D, 376, 376A, 376B, 376C, 376D, 376E அல்லது பிரிவு 509 ஆகியவற்றின் கீழ் வருகின்ற குற்றங்களுக்கு ஆளானவரின் கூற்று, Cr.P.C பிரிவு 161ன்படி பெண் காவல் அதிகாரியால் அல்லது பெண் அதிகாரியால் ஆவணப்படுத்தப்படும். ஒரு பெண்ணை தன்னுடைய இருப்பிடத்தைத் தவிர வேறு இடத்துக்கு வந்து கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று காவல் துறை நிர்ப்பந்தம் செய்ய முடியாது. (Cr.P.C பிரிவு 160).

  Cr.P.C **பிரிவு 161ன் கீழான கூற்றுகள் கையொப்பமிடப்படாதவை ஆகும்.**

- Cr.P.C பிரிவு 164ன் கீழ் கூற்றுகள் கட்டாயம்: Cr.P.C பிரிவு 164ன் கீழ் தாக்குதலுக்கு உள்ளானவரின் கூற்று நடுவர் முன்பு பதிவு செய்யப்படுவது கட்டாயம் ஆகும். பாதிப்புக்கு ஆளானவர், தற்காலிகமாக/ நிரந்தரமாக/ உடல் ரீதியாக/ மன ரீதியாக மாற்றுத் திறனாளி என்றால், விளக்கவுரை தருபவர் / அல்லது சிறப்புக் கல்வியளிப்பவர் ஒருவரின் உதவியுடன் நடுவர் பதிவு செய்வதை மேற்கொள்ளலாம். கூற்றினைப் பதிவு செய்வது வீடியோ பதிவு செய்யப்பட வேண்டும். அதுபோன்ற வழக்குகளில் மேற்படி வீடியோ பதிவு செய்யப்பட்ட கூற்று பாதிக்கப்பட்ட செய்யப்பட்ட முதன்மை விசாரணையாக (examination-in-chief) எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

- மருத்துவப் பரிசோதனை/ தாமதமின்றி சிகிச்சை: இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 326A, 376, 376A, 376B, 376C, 376D அல்லது 376E, ஆகியவற்றின் கீழ் உள்ள நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டவருக்குத் தாமதமாக மருத்துவ அல்லது முதல் உதவி அளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். பாதிக்கப்பட்ட பெண்மணியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தும்போது அவருடைய முழு சம்மதத்தின் பேரில் அல்லது, அவரின் சார்பில் சம்மதம் அளிப்பதற்கு தகுதியான நபரின் சம்மதத்தின் பேரில் மட்டுமே மருத்துவப் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

- புலனாய்வு விசாரணையின் போது காவல்துறைக்கு நீங்கள் அளித்த உதவிகளைப் பற்றிய ஆவணத்தை வைத்திருங்கள்: காவல்துறை சுதந்திரமாகச் செயல்படுவதாகும்.

நீங்கள் அளிக்கும் அனைத்து யோசனைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை. இருந்தபோதும், காவல்துறைக்கு நீங்கள் எப்படி உதவினீர்கள் என்பது பற்றிய ஆவணத்தை நீங்கள் கையில் வைத்திருந்தால், அவர்கள் பொருத்தமான ஆவணமொன்றை கண்டுகொள்ளாதிருந்தால், அது போன்ற ஆவணத்தை, விசாரணையின் போது நீங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம். நீங்கள் பரிந்துரைத்த சாட்சிகளின் பெயர்களை வைத்திருங்கள். வழக்கு தொடர்பான சொத்துக்களை மீட்பதற்கான வழிகாட்டும் குறிப்பு எதனையேனும் கொடுத்திருந்தால் அந்த தகவலையும் உங்கள் கைவசம் வைத்திருங்கள். புலனாய்வு செய்யும் அதிகாரி உங்கள் ஆலோசனைகள் / முன்வைப்புகளை கண்டுகொள்ளாதிருந்தால், தாமதம் செய்யாது காவல்துறை கண்காணிப்பாளரை முதலில் அணுகி சரி செய்வதற்கான நடவடிக்கைகளைக் கோருங்கள்.

## 16. மருத்துவ சோதனைக்கு உடன்பட முடியாது என்று மறுத்தும் கூட நான் வழக்கை நடத்த முடியுமா?

முடியும். மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட மாட்டேன் என்று நிலையெடுப்பது உங்கள் உரிமை. இருந்தபோதும் நீங்கள் 12 வயதுக்குக் குறைவானவர் என்றால் உங்களின் பெற்றோர், அல்லது பாதுகாவலர்அவர்கள் யாரும் இல்லாத சூழலில் மருத்துவ தொழில்முறையான ஒருவர் உங்கள் சார்பில் ஒப்புதல் வழங்குவார்.

## 17. மருத்துவ பரிசோதனையின் போதுசான்றுகள் சேகரிப்பதற்காக என்ன செய்யப்படும்?

உங்கள் அந்தரங்கத்தில் குறுக்கிடுவது போன்ற கேள்விகளை மருத்துவர் கேட்கலாம். ஆனால், அவை நிகழ்வைப் பதிவு செய்வதற்கு அவசியமானதாகும். உதாரணமாக:

- உதாரணமாக, பாலியல் வன்முறை நடைபெற்ற நாள், நேரம், இடம்போன்றவை.
- நிகழ்வின் முழு வரலாறு. சம்பவம் நடந்த விதத்தை (வரலாற்றை) வெளிப்படுத்துவதை அவக்கேடாக உணராதீர்கள். அந்த விவரமான குறிப்புகள் ஆவணப்படுத்தாவிட்டால், உங்கள் சாட்சியம் பலவீனமடையலாம்.
- தாக்குதலுக்குப் பிந்தைய நிகழ்வுகளைக் கேட்கலாம். உதாரணமாக, சம்பவம் நடந்த பின்னர், துணிகளை மாற்றினீர்களா? குளித்தீர்களா? சிறுநீர் கழித்தீர்களா? மலம் கழித்தீர்களா? பிறப்புறுப்பைக் கழுவினீர்களா? (வாய் வழி புணர்தல் நிகழ்ந்த சமயத்தில்) வாயைக் கழுவினீர்களா எதனையேனும் குடித்தீர்களா அல்லது உணவு உண்டீர்களா? இதுபோன்றவை ஆதாரங்களைச் சேகரிப்பதில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் மேற்சொன்னது போன்ற கேள்விகள் கேட்கப்படலாம். மேற்சொன்ன செயல்கள் நடைபெற்றிருந்தால் அவை ஆதாரங்களைப் பலவீனப்படுத்தியிருக்கும்.

---

சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வது பற்றிய வழிகாட்டு நெறிமுறைகளைத் தயார் செய்துகொண்டிருக்கிறது. விரைவில் அது வலைமனையில் கிடைக்கும். மேற்சொன்ன அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளையும் படிக்கவும்.

- விந்து மாதிரி எடுப்பதற்காக உங்கள் யோனிக்குழாய்க்குள் பஞ்சு நுழைத்து மாதிரி எடுத்த பின்னர், மருத்துவ சோதனைக்கு முந்தைய வாரத்தில் இருதரப்பு ஒப்புதலுடன் உடலுறவு கொண்டீர்களா என்று கேட்பார்கள்.

ஆதாரங்களைத் திரட்டுவற்கான மருத்துவப் பரிசோதனை பின்வரும் கட்டங்களைக் கொண்டதாக இருக்கும்:

(அ) விவரங்களைத் தெரிவித்துவிட்டு மருத்துவப் பரிசோதனைக்கு ஒப்புதல் பெறுவது: மருத்துவப் பரிசோதனைக்காகவும், மருத்து சிகிச்சைக்காகவும், ஆதாரங்களைச் சேகரிப்பதற்காகவும் அவை பற்றிய விவரங்களை உங்களுக்குத் தெரிவித்து அதன் பின் உங்கள் ஒப்புதலைப் பெறுவதை மருத்துவர் செய்ய வேண்டும். நீங்கள் 12 வயதுக்குக் குறைவானவர் என்றால், உங்கள் பெற்றோர்/ பாதுகாவலர் ஒப்புதல் பெறப்படும்.

(ஆ) காயங்களை ஆவணப்படுத்துதல்: பாலியல் வன்முறை தொடர்பானவற்றுக்காக (காயங்கள், இரத்தப் போக்கு, வீக்கம், கன்னிப் போயிருத்தல், கசிவுகள் போன்றவை) மருத்துவர் உங்கள் உடல் அங்கங்களை ஆய்வு செய்வார். காயங்களின் அளவு, இடம், வடிவம், நிறம் போன்றவை ஆவணப்படுத்தப்படும்.

(இ) புலனாய்வுக்கு உதவுவதற்காக தடயவியல் சான்றாதாரங்கள் சேகரிக்கப்படலாம்: அதுபோன்ற சமயங்களில் ஆடைகளை அகற்றுதல், விலக்குதல், முடியைச் சிரைத்தல், உங்கள் உடலில் உள்ள அன்னியப் பொருட்களைச் சேகரித்தல், எச்சிலைச் சேகரித்தல், பிறப்புறுப்பு முடி, யோனியிருந்தும், குதத்திலிருந்தும், மலவாயிலிருந்தும் வாயிலிருந்தும் மாதிரிகள் சேகரித்தல், இரத்த மாதிரி சேகரித்தல் போன்றவற்றைச் செய்வார்கள்.

(ஈ) இரண்டு விரல் சோதனை சட்ட விரோதமானது. அது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று உச்சநீதிமன்றம் நிலையெடுத்துள்ளது. வன்புணர்ச்சி குற்றத்திற்கும் நீங்கள் வழக்கமாக உடல் உறவு கொள்பவராக இருப்பதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. யோனிக்குள் கண்ணாடி குழாய் போன்ற சாதனத்தை நுழைத்துப் பார்வையிடும் சோதனை (Per Vaginum / Per Speculum) உட்காயங்கள் இருக்கின்றவனா என்று பார்வையிடுவதற்கும் மருத்துவம் செய்வதற்காக மட்டுமே மேற்கொள்ளப்படும். ஒரு வேளை மருத்துவர் அல்லது மருத்துவப் பணி செய்பவர் உங்கள் மீது இரண்டு விரல்சோதனை செய்யப்போவதாக அறிவித்தால் அவருக்கு ஒத்துழைக்காதீர்கள். இருந்தபோதும் உங்கள் மீது இரண்டு விரல் சோதனை நிகழ்த்தப்பட்டால் அதனை மருத்துவ அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என்று கோருங்கள். , விசாரணையின் போது அதனை நீதிமன்றத்தில் தெரிவியுங்கள். இச்செயல்பாடு சட்டவிரோதமானது என்று நீதிமன்றத்தில் குறிப்பிடும்படி உங்கள் வழக்கறிஞருக்குச் சொல்லுங்கள்.

(உ) வன்புணர்ச்சி நடந்ததா இல்லையா என்று மருத்துவத் தொழில் முறையாளர் கருத்து தெரிவிக்க முடியாது: பாலியல் வன்முறை நடந்ததா இல்லையா என்பது ஒரு சட்டப் பிரச்சனையே தவிர, அது மருத்துவப் பரிசோதனையின் முடிவல்ல.மருத்துவ சோதனைகளின் முடிவுகள் மட்டுமே மருத்துவ அறிக்கையில் ஆவணம் செய்யப்பட வேண்டும்.

நீங்கள் மாற்றுத் திறனாளி என்றால் மருத்துவத் தொழில் முறையாளர் பின்வரும் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்:

---

Lillu @ Rajesh and Anr v. State of Haryana 2013 (6) SCALE 17

(அ) தேவையான விவரங்களை (மருத்துவப் பரிசோதனையின் போது என்னென்ன நடக்கும், அவ்வாறு செய்வதற்கான காரணம் என்ன, சாத்தியமான ஆபத்துகள் மற்றும் அசௌகரியங்கள் என்ன) எளிய மொழியில் விளக்கிட வேண்டும். அத்துடன் புரிந்துகொள்ள எளிதான முறையில்/ வடிவில் விளக்கம் ஒரு படிவத்தைக் கொடுத்து விளக்கவும் வேண்டும்.

(ஆ) நீங்கள் முடிவெடுப்பதற்கு போதுமான நேரத்தை அளிக்க வேண்டும்.

(இ) நீங்கள் விவரம் தெரிந்து ஒப்புதல் அளிப்பதற்கு உதவியாகவும் முடிவை மருத்துவத் தொழில் முறையாளருக்கு தெரிவிப்பதற்கு வாய்ப்பாகவும், நண்பர்/ சக பணியாளர்/ அரவணைப்பவர் ஒருவரின் உதவியை உங்களுக்கு அளிக்க வேண்டும்.

நீங்கள் 18 வயதுக்குக் கீழ் உள்ள சிறுமி என்றால், POSCO சட்டப் பிரிவு 27(2)ன் கீழ் உங்களை பெண் மருத்துவர்தான் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

## 18. எனக்கு மருத்துவ உதவி வேண்டும். ஆனால், நான் புகார் செய்ய விரும்பவில்லை. அது சாத்தியமா?

இலவசமான மருத்துவ உதவி பெறுவது உங்கள் உரிமை. நீங்கள் பாலியல் வன்புணர்ச்சிக்குப் பலியானவர் ஆளானவர் என்றால், அனைத்து மருத்துவமனைகளும், அவை அரசு மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தனியார் மருத்துவமனையாக இருந்தாலும் சரி, உங்களுக்கு உடனடியாக இலவச மருத்துவம் முதலுதவியும் மருத்துவ சிகிச்சையும் இலவசமாக அளிக்க வேண்டும். (Cr.P.C பிரிவு 357C). குற்றவியல் திருத்தச் சட்டம் (CLA Act) 2013 இயற்றப்பட்ட பின்னர், அரசு மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தனியார் மருத்துவமனையாக இருந்தாலும் சரி, வன்புணர்ச்சிக்கு ஆளானவருக்கு உடனடி சிகிச்சை அளிக்க வில்லை என்றால், மருத்துவமனையின் பொறுப்பாளர் தண்டனைக்கு உரிய நபர் ஆவார். அவருக்கு ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதத் தொகை அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம். (இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 166B)

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு (Cr.P.C.) 357 C யின்படி அனைத்து மருத்துவமனைகளும் மருத்துவத் தொழில் முறையாளர்களும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் படி பாலியல் வன்புணர்ச்சி என்றான நிகழ்வைக் குறித்து காவல்துறைக்குத் தகவல் அளிக்க வேண்டும். அது அவர்களின் சட்டபூர்வ கடமையாகும்.

POCSO சட்டம் பிரிவு 19(1)ன்டி மருத்துவ தொழில் முறையாளர்கள், மருத்துவமனைகள் உட்பட அனைவரும் சிறார் ஒருவர் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறை அல்லது வன்புணர்ச்சி பற்றி காவல் துறைக்கு அல்லது சிறார் நீதி சிறப்புக் காவல் பிரிவுக்குத் (Special Juvenile Police Unit -SJPU) தகவல் கொடுப்பது அவர்களின் சட்டபூர்வ கடமையாகும்.

நீங்கள் வயதுக்கு வந்த பெண்ணாக இருந்தாலும் சரி, அல்லது பாலியல் தாக்குதலுக்கு ஆளான சிறார் ஒருவரின் பெற்றோராக அல்லது பாதுகாவலராக இருந்தாலும் சரி, நீங்கள் காவல்துறைக்குத் தகவல் கொடுக்கவிரும்பவில்லை என்றால், மருத்துவமனைக்கு அல்லது மருத்துவத் தொழில் முறையாளருக்கு அதனைத் தெரிவிக்கவும். விவரங்களைத்

தெரிந்துகொண்டு நீங்கள் மறுக்கிறீர்கள் என்ற தகவல், சட்டத்தின்படி, காவல் துறைக்கு அல்லது சிறார் நீதி சிறப்புக் காவல் பிரிவுக்கு அறிவிக்கப்படும்.

இருந்தபோதும், இப்பிரச்சனையில் உரிமை கொண்டாட வாய்ப்புள்ள பிறர், உங்களின் விவரம் அறிந்த மறுப்பைக் கருத்தில் கொள்ளாது போகும் சூழலும் ஏற்படலாம் என்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக உங்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் காயம் ஏற்பட்டிருந்தால், அதனை ஏற்படுத்தியவர் மீது தண்டனை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது, உங்களின் அந்தரங்கத்தைக் காப்பதை விட முக்கியமானதாகிப் போய்விடும். மேற்படி காயம், கொலை முயற்சியினால், அல்லது தற்கொலை முயற்சியினால் அல்லது பிரிதொன்றாகக் கூட இருக்கலாம். அது போன்ற சமயத்தில் மன நல ஆலோசனையும் உங்களின் மறுவாழ்வுக்கான சமூக சேவைகளும் உங்களுக்கு அளிக்கப்படலாம்.

நீங்கள் சிறாராக இருந்து உங்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உங்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆட்படுத்தினால், மனநல ஆலோசனை உங்களுக்கு அளிக்கப்படலாம், உங்களை சிறார் நல்வாழ்வு கமிட்டியிடம் இட்டுச் செல்லலாம்.

அதுபோன்ற சமயங்களில் காவல்துறை அல்லது சிறார் நீதி சிறப்புக் காவல் பிரிவு உங்களின் ஒப்புதல் இல்லாத போதும் நடவடிக்கை எடுப்பது சட்டபூர்வ கட்டாயம் ஆகும்.

## 19. புலன்விசாரணை முடிந்த பின்னர் அடுத்த நடவடிக்கை என்ன?

காவல்துறையின் புலன் விசாரணை ஒரு முடிவுக்கு வரும்போது, தண்டனை நடவடிக்கை எதனையும் பரிந்துரைக்கவில்லை என்றால் ''இறுதி அறிக்கை'' என்று அழைக்கப்படுவதும், தண்டனை நடவடிக்கை பரிந்துரைக்கப்படும் போது ''குற்றப் பத்திரிகை'' என்றழைக்கப்படுவதும் தாக்கல் செய்யப்படுகிறது. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்போது வழக்கு நடவடிக்கையின் முதல் கட்டமாக விசாரணைத் துவங்கிறது. பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்:

- மூடல் அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டால்: குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவருக்கு எதிரான தண்டனை நடவடிக்கையையோ அல்லது குற்றங்களில் ஒன்றையோ காவல்துறை நீக்க ஊர்ஜிதப்படுத்தும் போது, நடுவருக்கு முன்பு உங்கள் வழக்கை உரைக்க உங்களுக்கு உரிமையுண்டு. குற்றத்தை ருசுப்படுத்தும் சான்றாதாரங்கள் (உதாரணமாக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 161ன் கீழான ருசுப்படுத்தும் கூற்றுகள், காவல்துறையின் வழக்கு குறிப்பேடு) இருக்கும் என்றால், காவல்துறையின் பரிந்துரையை நடுவர் தள்ளுபடி செய்வார்.
- குற்றப்பத்திரிகையில் ஒரு நபர் குற்றத்தில் ஈடுபட்ட தகவல் வெளிப்பட்டிருந்து அவரைக் குற்றவாளிப் பட்டியலில் சேர்க்கவில்லை என்றால்: நடுவர் ஒருவர் குற்றத்தைப் புலன்கொள்ளும்போது, காவல்துறையால் பரிந்துரைக்கப்பட்டவர்களை மட்டும் அவர் அழைக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் இல்லை. குற்றப்பத்திரிகையைப் படிக்கும்போது, யாரின் பெயரெல்லாம் குற்றத்தில் ஈடுபட்டதாகப் புரிதல் கிடைக்கிறதோ அவர்களையெல்லாம் ஆஜர் ஆகும்படி அவர் அழைக்கலாம். எனவே, குற்றப்பத்திரிகையுடன் தாக்கல் செய்யப்பட்டவற்றில் ஒரு நபருக்கு எதிராக வழக்கு நடத்த வேண்டிய நிலையிருந்து,

அவரின் பெயர் குற்றப்பத்திரிகையில் அவரும் குற்றவாளி என்று காவல்துறை குறிப்பிடவில்லையென்றால் , அவரைக் குற்றவாளியாகச் சேர்க்க வேண்டும் என்றும், அவரை நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பதற்கான நடவடிக்கையைத் துவங்க வேண்டும் என்றும் நீங்கள் நடுவரிடம் கோரிக்கை வைக்கலாம்.

- கூடுதல் விசாரணைத் தேவையென்று முறையிடுவது: காவல் துறை அறிக்கை மூலம் அல்லது வேறு வகையிலோ, வழக்கின் முக்கியமான அம்சங்களை காவல்துறை புலனாய்வு கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்று அல்லது புதிய சான்றாதாரங்கள் இருக்கிறது என்று தெரியவரும் என்றால், உங்கள் முறையீட்டைக் கேட்ட பின்பு கூடுதல் விசாரணைக்கு நடுவர் உத்தரவிடலாம். அந்த விசாரணை முடிவடைந்த பின்னர் கூடுதல் அறிக்கை நடுவர் முன்பு பொருத்தமான நடவடிக்கைக்காகச் சமர்ப்பிக்கப்படும். குற்றவாளிக்கு எதிரான வழக்கை முழுமையாக காவல்துறையின் குற்றப்பத்திரிகை உள்வாங்கியிருக்கவில்லை என்றால், தனிநபர் புகார் ஒன்றை பதிவு செய்வது பற்றி நீங்கள் பரிசீலிக்கலாம்.அதுபோன்ற சமயங்களில், காவல் துறை விசாரணைக்கு துணையாக தனியார் விசாரணையும் மேற்கொண்டு கூடுதல் சான்றாதாரங்களை நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கலாம்.

## 20. என்னால் வழக்கறிஞருக்கு செலவு செய்ய முடியாது. நான் என்ன செய்யலாம்?

சட்ட சேவைகள் அதிகார அமைப்பு சட்டம் 1987ன் (Legal Services Authorities Act, 1987) பிரிவு 12ன் படி அனைத்து சிறார்களுக்கும் பெண்களுக்கும் சட்ட சேவை பெறும் உரிமை இருக்கிறது. வழக்கறிஞர் ஒருவர் தேவை என்று உங்கள் மாநிலத்தின் சட்ட சேவை அதிகார அமைப்பை நீங்கள் அணுகலாம். மற்றொரு மாற்று ஏற்பாடும் இருக்கிறது. சட்ட சேவை செய்யும் அரசு சாரா நிறுவனத்தை அணுகி அவர்களின் வழக்கறிஞர் ஒருவரை அளிக்கும்படி நீங்கள் கோரலாம். அல்லது சம்பளம் மான்யம் அளிக்கப்பட்டதாகவோ அல்லது வெகு குறைவாகவோ இருக்கும் ஒரு வழக்கறிஞரை அறிமுகப்படுத்தக் கோரலாம்.

ஒரு வழக்கின் புலன் விசாரணைக் கட்டம் துவங்கி வழக்கு விசாரணை நிறைவடைவது வரையிலான சட்ட நடைமுறைகள் பற்றி உங்களுக்குப் புரிதல் ஏற்படுத்துவதற்கு மாநில சட்ட சேவை மையம் அல்லது சட்ட விவகாரங்களில் சேவை அளிக்கும் அரசு சாரா நிறுவனம் உங்களுக்கு உதவி செய்வார்கள். சட்ட புரிதலை நீங்கள் மேம்படுத்திக்கொள்ளும்போது நீதிமன்ற உத்தரவுகள் அல்லது நடைமுறைகளை நீங்கள் கேள்விக்குட்படுத்துவது எளிதானதாக இருக்கும்.

சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும்போது அவருக்கு ஆதரவாகச் செயல்படுபவரின் பாத்திரம் பாதிக்கப்பட்ட சிறார் மருத்துவ நடைமுறைகளையும் சட்ட நடைமுறைகளையும் கடந்து வருவது இரண்டாவது கொடுமையாக அவர்களுக்கு அமைய வாய்ப்பிருக்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் தாமதம் ஏற்படுவதற்கும், சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பினர் அல்லது மற்றவர்கள், சிறார்களின் மனநிலையை அறியாதிருப்பதற்கும், சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகள்/ சேவைகளைச் சேர்ந்தவர்கள் கேட்கும் ஒரே மாதிரியான கேள்விகளுக்குத் திரும்பத் திரும்ப பதில் சொல்ல வேண்டிய நிலை என்ற பல்வேறு வடிவங்களில் இரண்டாவது கொடுமையை அவர்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும். இப்பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு உதவியாக, இந்த வழக்குத் தொடர்பாக தொடர்பு கொள்வதற்கு சிறாரின் சார்பாக ஒருவர் செயல்படலாம்.

POCSO விதிகள் 4 (7)ன்படி சிறார் நல்வாழ்வு கமிட்டி (CWC) பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட சிறாருக்கு உதவி செய்வதற்கென்று ஒருவரை அமர்த்தலாம். சிறாரின் பெற்றோர், பாதுகாவலர் அல்லது சிறாரின் நம்பிக்கைக்குரிய ஒருவர், இந்த சட்டத்தின் கீழான நடைமுறைகளுக்காகவென்று ஆதரவாகச் செயல்படக்கூடிய ஒருவரை அல்லது அமைப்பை அணுகலாம். சிறப்பு நீதிமன்றம் சிறாருக்கு உதவுவதற்காக ஆதரவளிக்கும் நபர் ஒருவரை நியமிக்கலாம்.

ஒரு நபர் அனைத்து விவகாரங்களையும் ஒருங்கிணைப்பதால், தாக்குதலுக்கு ஆளானவருக்கும் நீதிமன்ற நடைமுறைக்கும் இடையில் பாலமாகச் செயல்படுவதால், நீதிகோரும் நிகழ்வுப் போக்கை சிறாருக்கு எளிமையாக்கும் வகையில், ஆதரவாகச் செயல்படும் நபர் சிறாரையும் அவரது பெற்றோரை அல்லது பாதுகாவலரை, நீதி நிகழ்வுப் போக்கு முழுமைக்கும் கரம் பிடித்து அழைத்துச் செல்லும் நபராகச் செயல்படுவார்.

தமிழ்நாட்டில் கிடைக்கும் சில சட்ட உதவி அமைப்புகள்

- தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு 25501257
- சமூக சேவைக்கான சென்னை கிறிஸ்தவ கவுன்சில் 044–26700744
- அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம் 044 – 28511231 / 044 – 28511819
- பெண்கள் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிக்கான மையம்
  044 – 24455868 / 24482821 / 9840079671

## 21. எந்தெந்த சட்ட உத்தரவுகளுக்கு நான் எதிர்பபுத் தெரிவிக்க முடியும்?

வழக்கு விசாரணை முடிந்து இறுதி முடிவு எட்டப்பட்ட நிலையில் மேல் முறையீடு செய்வதற்கான உரிமை, பொதுவாக, தொடங்குகிறது. இருந்தபோதும், அதற்கு முன்னதாக, கண்டுணரப்பட்டவற்றின் சட்டபூர்வத் தன்மை, தண்டனைக்காக வாதிடும் தரப்பின் அணுகுமுறைக் கோட்பாடுகள் குறித்து நீங்கள் மறு பரிசீலனைக் கோரலாம். ஆனால், அதனால் பெறப்படும் உத்தரவுகள் இடைக்காலத் தன்மை வாய்ந்தவையே தவிர நிரந்தரமனவை அல்ல.

தயை செய்து கவனிக்கவும்:

- புலன் விசாரணை செய்யும் அதிகாரி தன் கடமையைச் செய்து பாதிக்கப்பட்டவருக்கு உதவி செய்யவில்லை என்றால், நீங்கள் தலையிட்டு குற்றம் சாட்டப்பட்வருக்கு அளிக்கப்பட்ட பிணையை அல்லது எதிர்பார்ப்பு பிணையை இரத்து செய்ய கோரலாம். மேலும் சான்றாதாரங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாமல் வழங்கப்பட்ட பிணை அல்லது எதிர்பார்ப்பு பிணையை நீங்கள் எதிர்க்கலாம்.
- பிணை அல்லது எதிர்பார்ப்பு பிணை வழங்கப்படும்போது, குற்றவாளிக்கு தேவையான நிபந்தனைகளை விதிக்கவில்லை என்றால், Cr.P.C. சட்டப் பிரிவு 482ன் கீழ் உயர்நீதிமன்றத்திற்கு உள்ள உள்ளார்ந்த அதிகாரத்தைப் பயன்டுத்தி பொறுத்தமான நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என்று நீங்கள் உயர் நீதிமன்றத்தை அணுகலாம்.
- புலனாய்வு கட்டத்தின் போது அளிக்கப்படும் உத்தரவுகளை நீங்கள் எதிர்க்கலாம். Cr.P.C. பிரிவு 397 (2)ன் படி எந்தவொரு முறையீடு, விசாரணை, வழக்கு விசாரணை அல்லது எந்த விசாரணை நடவடிக்கையின் போதும் வழங்கப்படும் இடைக்கால உத்தரவுகளை மீளாய்வு செய்யும் அதிகாரம் இல்லை என்று கூறுகிறது. இதில் புலன்விசாரணை என்பது குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.
- குற்றத்தைப் புலன் கொள்ளாமல் அளிக்கப்படும் உத்திரவின் மீது நீங்கள் உயர்நீதிமன்றத்தில் மீளாய்வு மனு (revision) தாக்கல் செய்யலாம். குற்றத்திற்கு ஆதாரமாக உள்ள சான்றாதாரங்கள் உத்திரவை திரும்பப் பெற போதுமானது என்று வாதிடலாம்.
- குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றதில் நேரில் ஆஜராகி, கூற்றுகள், ஆவணங்கள் அவருக்கு அளிக்கப்பட்ட பின்பு நடுவர் / அமர்வு நீதிபதியின் முன்பு தன்னைக் குற்றத்திலிருந்து விடுவிக்கும்படி கோரலாம். அதுபோன்ற சமயத்தில் அவரின் கோரிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டதென்றால், அந்த உத்தரவை எதிர்த்து நீங்கள் உயர் நீதிமன்றத்தில் மீளாய்வு மனு தாக்கல் செய்யலாம்.

## 22. அரசு வழக்கறிஞரின் (Public Prosecutor) பாத்திரம் என்ன?

காவல்துறை அறிக்கை/ குற்றப்பத்திரிகையின் மீது நடக்கும் வழக்கில் அரசின் சார்பாக அரசு வழக்கறிஞர் ஆஜராவார். சட்ட உதவி அமைப்பின் வழக்கறிஞர் அல்லது, உங்களின் வழக்கறிஞர் அரசு வழக்கறிஞருக்கு உதவியாக அவரின் கீழ் செயல்படலாம். உங்களுடைய தனிப்பட்ட வழக்கறிஞரோ, அல்லது சட்ட உதவி மையத்தின் வழக்கறிஞரோ தண்டனை வழக்கை நடத்தும், அதாவது அரசு வழக்கறிஞருக்கு விசாரணை நீதிமன்றத்தின் அனுமதியுடன் உதவி செய்யலாம். பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்:

மூடல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட போது: தண்டனை ஏதும் அளிக்க வேண்டாம் வழக்கை புலன் கொள்ளத் தேவையில்லை என்ற காவல்துறையின் இறுதி அறிக்கை பரிந்துரைக்கும்போது முதல் தகவல் அளித்தவரின் கருத்துக்களையும் பாதிக்கப்பட்டவரின் கருத்துக்களையும் நடுவர் செவிமடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவரின் கருத்தைக் கேட்டபின்னால், இறுதி அறிக்கையில் அல்லது வழக்குக் குறிப்பேட்டில் உள்ள தகவல்களின் அடிப்படையில் குற்றத்தை நடுவர் புலன் கொள்வார் என்றால், அரசு வழக்கறிஞர் வழக்கிற்கு பொறுப்பேற்று நடத்துவார்.

தண்டனை அளிக்கக் கோரும் வழக்கை நடத்துவதற்கான அனுமதி: விசேஷமுறையில், அரசு ஒரு தண்டனை கோரும் வழக்கை நடுவர் ஒருவர் முன்பு நடத்தும்போது, நடுவரின் அனுமதியைப் பெற்று தனியார் வழக்கறிஞர் ஒருவரை நியமிக்கலாம் ஆனால், இது போன்ற அனுமதி மிக விசேஷமான நிலைமைகளில்தான் வழங்கப்படும். அமர்வு நீதிமன்றம் ஒன்றில் விசாரிக்கப்படக் கூடிய வழக்குக்கு அரசு வழக்கறிஞரே பொறுப்பானவர்: புகார் அளித்த பெண்மணியும் அவரின் வழக்கறிஞரும் நடுவர் நீதிமன்றத்தில், அந்த வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்குச் செல்வது வரை, வாதம் செய்யலாம். வழக்கு அமர்வு நீதிமன்றதை எட்டிவிட்டது என்றால், அதன் பின் தண்டனை கோரும் தரப்பின் பொறுப்பாளராக அரசு வழக்கறிஞரே இருப்பார். வேறு எந்த வழக்கறிஞரும் அரசு வழக்கறிஞருக்கு உதவியாக மட்டுமே செயல்பட முடியும்.

மிக முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தண்டனை வழங்கக் கோரும் வழக்கை நடத்துவதற்கு சிறப்பு அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படலாம்: அதுபோன்ற வழக்குகளில் அரசு சிறப்பு அரசு வழக்கறிஞரை நியமனம் செய்யலாம். அதுபோன்ற சமயங்களில் பாதிக்கப்பட்டவர் எந்த வழக்கறிஞரை நியமனம் செய்யலாம் என்று ஒரு பெயரை/பெயர்களைஆலோசனைக்கு முன்வைக்கலாம் .

- POCSO சட்டப் பிரிவு 32ன் படி, சிறார் பாலியல் துஷ்பிரயோக வழக்குகளில் சிறப்பு அரசு வழக்கறிஞரை மாநில அரசு நியமனம் செய்வது கட்டாயமானதாகும். சிறப்பு வழக்கறிஞர் வராதிருக்கும்போது அல்லது கிடைக்காத போது வழக்கின் பொறுப்பாளர் ஆகிய அரசு வழக்கறிஞரே தண்டனை வழங்கக் கோரும் தரப்பின் வழக்கை நடத்தலாம்.
- துணை அரசு வழக்கறிஞர் எழுத்து பூர்வமாக சமர்ப்பிப்புக்களை அளிக்கலாம்: Cr.P.C. பிரிவு 301(2)ன் கீழ் சான்றதாரங்கள் குறித்த விசாரணை முடிந்த பின்னர் உதவி அரசு வழக்கறிஞர் எழுத்து பூர்வமான சமர்ப்பிப்புகளை அளிக்கலாம். இதன்படி எழுத்துபூர்வ அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி அரசு வழக்கறிஞருக்கு உதவியாகச் செயல்படும் உங்களின் ‘தனியார்’ வழக்கறிஞருக்கு ஆலோசனை சொல்லுங்கள்.

**எழுத்து பூர்வ வாதம்**

சாட்சியமளிப்பது முடிந்த பின்னர், நீதிமன்றத்தின் அனுமதியுடன், உங்கள் சார்பில் எழுத்து பூர்வ வாதத்தை முன்வைப்பது விசாரணை நீதிமன்றம் உங்கள் வாதத்தை ஏற்றுக்கொண்டு குற்றமிழைத்தவரைத் தண்டிக்க வேண்டும் என்று தீர்மானிக்க வைப்பதற்கான பயனுள்ள முறையாக இருக்கும். உங்களின் எழுத்துபூர்வ வாதத்தில் பின்வரும் அம்சங்கள் இருக்க வேண்டும்:

- தண்டனை வழங்கிட வேண்டும் என்று கோருகிற வாதம் முன்வைத்த சான்றாதாரங்கள் பற்றிய ஆய்வும் அதனை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்களும், சிறிய முரண்பாடுகளைக் கண்டுகொள்ள கூடாது என்பதும்.

- தண்டனை வழங்கக் கோரும் தரப்பின் சாட்சியங்கள் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றமிழைத்தவரே என்பதைக் காட்டுவது எவ்வாறு என்பதை விளக்கவும்.
- சாட்சியும் பிறழ் சாட்சியம் (Hostile witnesses) அளித்தவர்களின் (அப்படி யாராவது இருந்தால்) ஒரு பகுதி சாட்சியம் எப்படி குற்றத்தைச் சுட்டிக்காடுகிறது என்பதை விளக்கவும்• Cr.P.C பிரிவு 313ன் கீன் குற்றவாளி அளித்த சாட்சியத்தின் எந்தப் பகுதி குற்றத்திற்குப் பயன்பட்ட பொருட்களை ஒப்புக்கொள்வதைக் காட்டுகிறது என்பதையும் எந்தப் பகுதிகள் தெளிவின்றி இருக்கின்றன என்பதையும் இவையனைத்தையும் ஒன்று சேர்த்து தண்டனை அளிக்க வேண்டும் என்ற வாதத்துடன் சேர்த்துப்பார்த்து குற்றவாளிக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று கோருங்கள்.
- குற்றவாளிக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்ற உங்கள் வாதத்துக்கு ஆதரவாக வழக்குத் தொடரபான சட்டங்களையும் தீர்ப்புவழி சட்டங்களையும் சுட்டிக்காட்டுங்கள்.
- Cr.P.C பிரிவு 357(1)ன் கீழ் அபராதம் விதித்து அதன் பகுதியை இழப்பீடாக வழங்கும்படி அல்லது பிரிவு 357 (3) ன்படி அபராதம் விதிக்காமல் இழப்பீடு வழங்கும்படியும் குற்றவாளிக்கு உத்தரவிடும்படி வேண்டுகோள் விடுங்கள்.

டெல்லியில் உள்ள பாலியல் வன்புணர்ச்சி பாதிப்புக்கு ஆளானவருக்கான உதவி மையங்களின் பாத்திரங்கள்

டெல்லி பெண்கள் ஆணையம் எதிர் டெல்லி போலீஸ் (In Delhi Commission for Women v. Delhi Police W.P. (Crl) 696/2008) என்ற வழக்கில் டெல்லி உயர்நீதிமன்றம் பின்வருவனவற்றை உள்ளிட்டு தீர்ப்பு வழங்கியிருக்கிறது:

- வன்புணர்ச்சி புகார் ஒன்றைப் பெற்ற கடமையில் இருக்கும் அலுவலர் ‘‘வன்புணர்ச்சி நெருக்கடி அறைக்கு (Rape Crises Cell” -RCC) அதன் அறிவிக்கப்பட்ட தொடர்பு எண்ணுக்குத் தொடர்பு கொண்டு சம்பவம் பற்றி தெரிவிக்க வேண்டும். (டெல்லியைப் பொறுத்தவரை RCCயின் வழக்கறிஞர்கள் பாதிக்கப்பட்ட பெண்ணுக்காக வழக்கு நடத்துவார்கள்)
- பாதிக்கப்பட்ட பெண்ணுக்கான தங்குமிடம், சமூக சேவகர்கள், ஆலோசகர்கள், மன நல மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் RCCயின் கைவசம் இருக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவு அளிக்கும் நபர், RCC வழக்கறிஞகள், அல்லது பாதிக்கப்பட்டவர், பாதிக்கப்பட்டவருக்கு அல்லது அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்றும் சமரசம் செய்துகொள்ள வேண்டும் என்று குற்றம் சாட்டப்பட்டவர் மிரட்டுகிறார் என்று தெரிவித்தால், நீதிபதி உடடினயாக காவல்துறை உதவி ஆணையரைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். உத்தரவிட்ட இரண்டு நாட்களுக்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து நீதிபதிக்கு அவர் அறிக்கை செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டவர் மற்றும் அவரின் குடும்பத்திற்கு பாதுகாப்பு அளிக்கப்படுவதை நீதிமன்றம் உத்தரவாதம் செய்ய வேண்டும்.
- புகார் ஒன்று வந்தவுடன் கடமையில் இருக்கும் அலுவலர் பெண் காவல் அதிகாரியை அழைத்து புகாரைப் பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு துணை தலைமை நிலைய அதிகாரியும் (SHO) தலைமை காவலர் அந்தஸ்த்துக்குக் குறையாத பெண் காவல் அதிகாரி ஒருவர் நிலையத்தில் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- பெண் அலுவலர் கிடைக்காத நிலையில்: மாவட்டத்தின் பிற காவல் நிலையத்தில் இருக்கும் பிறிதொரு பெண் காவல் அதிகாரியைக் கொண்டுவந்து உடனடியாக அவர் அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
- கடமையில் இருக்கும் அதிகாரி புகாரைப் பெற்ற உடன் RCC அறிவித்துள்ள அதன் தொடர்பு எண்ணுக்குத் தொடர்பு கொண்டு தகவல் அளிக்க வேண்டும்.
- RCC அழைப்பை பெற்ற பின்னர், அதன் பங்கிற்கு உடனடியாக நெருக்கடி நிலை தலையீட்டு மையத்தை (Crisis Intervention Center-CIC) தொடர்புகொள்ள வேண்டும். அவர்கள் மனநல ஆலோசகரை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைப்பர்.
- CICயின் மன நல ஆலோசகர் வன்புணர்ச்சிக்கு ஆளானவருக்கு உரிய மனநல ஆலோசனைகளை வழங்குவார். ஆலோசகரின் சேவை இரவு நேரத்தில் தேவைப்படும் என்றால், சம்பந்தப்பட்ட நிலையத்தின் துணை தலைமை அதிகாரி அவரை அழைத்து வரவும் திரும்பிக்கொண்டுபோய் விடுவதற்கும் வாகனத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- ஆலோசகர் வந்து சேர்வதில் தேவையற்ற தாமதம் ஏற்படும் என்றால் RCCயைத் தொடர்பு கொண்டு மாற்று ஆலோசகரை அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 23.விசாரணையின் போது என்ன நிகழும்?

விசாரணை என்பதுதான் குற்றவியல் நடைமுறையில் முக்கியமான அங்கமாகும். அனேகமாக பல வழக்குகளிலும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றாதாரங்களே இறுதி தீர்ப்புக்கான, அதாவது தண்டனை அல்லது விடுதலை என்பதற்கான அடிப்படையாக இருக்கும்.

பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளவும் :

(அ) ஞாபகப் படுத்திக்கொள்ளுங்கள் : சாட்சிக் கூண்டுக்குள் நுழைந்து சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டவுடன், Cr.P.C பிரிவு 161ன் கீழ் காவல்துறைக்கு நீங்கள் அளித்த சாட்சியக் கூற்று உட்பட உங்களின் அனைத்து சாட்சியக் கூற்றுககளையும் நீங்கள் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும். குற்றம் நடந்து வெகுநாட்கள் கழித்து சாட்சியம் எடுக்கப்பட்டிருந்தால், மேலும் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு உங்கள் ஞாபகத்தை நீங்கள் நன்றாக உசுப்பி விட்டுக்கொள்ள வேண்டும்.

(ஆ) பொருத்தமற்ற கேள்விகளுக்கு அனுமதியில்லை: முதன்மை குறுக்கு விசாரணையின் போது அரசு வழக்கறிஞர் பதிலை உள்ளடக்கிய கேள்வியை உங்களிடம் கேட்கக் கூடாது. ஆனால், குறுக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவரின் வழிக்கறிஞர் அதுபோன்ற கேள்விகளை உங்களிடம் கேட்கலாம்.

- நாகரீகமற்ற அவமரியாதையான, வழக்குடன் நேரடி சம்பந்தமற்ற கேள்விகளை நீதிமன்றம் தடை செய்யலாம். • உங்களை எரிச்சல் படுத்துகின்ற, தாக்குதல் தன்மை வாய்ந்த கேள்விகளையும் தடை செய்யலாம்.
- எந்தக் கேள்விவை சாட்சியிடம் கேட்கக் கூடாது என்பதை விசாரணை நீதிமன்றமே முடிவு செய்யும்.
- குறுக்கு விசாரணையின் போது சாட்சி என்ற வகையில், உங்களின் நம்பகத் தன்மையை சிதைக்கும் வகையிலான கேள்வியை எதிர் தரப்பு வழக்கறிஞர் கேட்பார் . எனவே, நீங்கள் எந்த அளவு முடியுமோ அந்த அளவுக்கு கட்டுக்குலையாமல் இருந்து விவரங்சளைத் தொகுத்து சாட்சியமளிக்க வேண்டும்.

- Cr.P.C சட்டப் பிரிவு 327(2)ன் படி பாலியல் வன்புணர்ச்சி தொடர்பான விசாரணை மூடப்பட்ட அறைக்குள் நடக்க வேண்டும். இருந்தபோதும் அமர்வில் இருக்கும் நீதிபதி, இருதரப்பாரும் சேர்ந்து எழுப்பும் கோரிக்கை மனுவின் பேரில் எந்த ஒருவருக்கும் விசாரணை நடக்கும் நீதிமன்ற அறையை இடத்தை அணுக, அல்லது மூடப்பட்ட விசாரணை அறையில் இருக்க, நீதிமன்றம் பயன்படுத்தும் கட்டிடத்தில் இருக்க அனுமதிக்கலாம்.

இந்திய சான்றாதாரச் சட்டம் 1872ன் (Indian Evidence Act, 1872 -"IEA") பொருத்தமான சில பகுதிகள்:

- பாலியல் வன்புணர்ச்சிக்கான தண்டனை நடைமுறைகளில் ஒப்புதல் பெற்ற பாலுறவு இல்லை என்ற முன்கூட்டிய கருத்தாக்கம் IPC பிரிவு 376 உட் பிரிவு (2)ன் வாசகங்கள் (a) முதல் (n) வரையிலும் வெளிப்படுகின்ற. [IEA சட்டத்தின் பிரிவு 114A].

- இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 354, 354A, 354B, 354C, 376, 376A, 376B, 376C, 376D, அல்லது 376E, IPC, கீழான குற்றங்கள் அல்லது மேற்சொன்னவற்றில் ஏதாவது ஒரு குற்றத்தைச் செய்ய முயற்சித்திருந்தால் குற்றத்திற்கு ஆளானவரின் ஒப்புதல் இருந்ததா இல்லையா என்ற பிரச்சனை வரும்போது, அவள் ஒப்புதல் தெரிவித்தாரா இல்லையா என்பதற்கு அவளின் நடத்தையோ அல்லது அவளின் முந்தைய பாலியல் அனுபவங்களோ சரியான முடிவுக்கு வருவதற்குக் காரணங்களாக இருக்காது. [IEA சட்டத்தின் பிரிவு 53A].

- இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள்376, 376A, 376B, 376C, 376D அல்லது 376E, IPC, கீழான குற்றங்கள் அல்லது மேற்சொன்னவற்றில் ஏதாவது ஒரு குற்றத்தைச் செய்ய முயற்சித்திருந்தால், குற்றத்திற்கு ஆளானவரின் ஒப்புதல் இருந்ததா இல்லையா என்ற பிரச்சனை வரும்போது அந்தப் பெண்ணின் பொதுவான ஒழுக்கக் குறைவான நடத்தை அல்லது அவரவருடன் அவளது முந்தைய பாலியல் உறவுகள் குறித்து நிரூபிக்க குறுக்கு விசாரணையின் போதோ அல்லது வாதங்களுக்கு உட்பட்டு சாட்சிகளை சமர்ப்பிக்கவோ அனுமதி இல்லை (IEA சட்டத்தின் பிரிவு 146) பேசமுடியாத ஒருவர் வேறு எந்த புரிந்துகொள்ளக் கூடிய முறையிலும், நீதிமன்றத்தில் அனைவரும் முன்னும் எழுத்து வடிவில், அல்லது சைகைகள் மூலம் சாட்சியம் அளிக்கலாம். அது வாய்வழி சாட்சியமாக எடுத்துக்கொள்ளப்படும். அல்லது அவர் வாய்மூலம் சாட்சியமளிக்க வாய்ப்பில்லாத போது விளக்கிச் சொல்பவர் ஒருவர் வழியாகவோ அல்லது சிறப்புக் கல்வியளிப்பவர் ஒருவர் மூலமோ சாட்சியமளிக்கலாம். [IEA சட்டப் பிரிவு 119].

விசாணையின் போது உங்களின் பிரதான வேலை சாட்சியமளிப்பதுதான். ஆனால், வழக்கு விசாரணை எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பது பற்றிய தகவலை நீங்கள் தொடர்ந்து அறிந்துகொள்ள வேண்டும். எந்த சாட்சியம் வழக்கிற்கு உதவியாக அமைந்தார், எந்த சாட்சியம் குறுக்கு விசாரணைத் தாக்குப் பிடித்தார், எந்த சாட்சியம் பிறழ் சாட்சியம் அளித்தார், அல்லது குற்றச்சாட்டு மீது சந்தேகம் எழும் வகையில் நடந்துகொண்டார், எந்த சாட்சியம் வழக்கில் ஆஜராகமல், தான் வாழ்ந்த இடத்தை விட்டு, புதிய முகவரி கொடுக்காமல் மறைந்துவிட்டார்

போன்ற அனைத்து விவரங்களையும் நீங்கள் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் பின்வரும் வகைகளில் தண்டனை கோரும் வழக்கிற்கு பின்வரும் முறைகளில் உதவலாம்:

- சாட்சியமளிக்க வேண்டியவருக்கு அனுப்பப்பட்ட சம்மன்கள் அவர்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் திரும்பி வந்தால், அந்த சாட்சியங்கள் எங்கிருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து அவர்களின் முகவரிகளை எழுத்து மூலம் நீதிமன்றத்தில் அளியுங்கள். அதன் மூலம் அவர்களின் வருகையை உறுதி செய்ய வாய்ப்பிருக்கிறது.
- தண்டனை கோரும் தரப்பின் வழக்கறிஞர் பொருத்தமான சாட்சியத்தைக் குறிப்பிடாமல் விட்டிருந்தால், அது பற்றி நீதிமன்றத்திற்குத் தெரிவியுங்கள். சாட்சியத்தைப் பதிவு செய்வதற்காக அவரை அழைக்கும்படி கோருங்கள்.
- தண்டனை வழங்கக் கோரும் தரப்பின் சாட்சியமளிப்பு முடிந்த பின்னர், குற்றத்தை ருசுப்படுத்தும் உண்மை விவரங்கள், சூழல் போன்றவற்றை குற்றவாளியின் முன் வைத்து அவரின் தெளிவான விளக்கத்தைப் பெறுவதற்கு உதவியாக, நீதிமன்றத்தின் குறுக்கு விசாரணையின்போது, நீதிமன்றம் குற்றாவாளியிடம் கேட்க வேண்டிய கேள்விகளின் பட்டியலைத் தயார் செய்ய உங்களுக்கு உதவியாக இருக்கும் வழக்கறிஞருக்கு நீங்கள் உதவியாக இருக்கலாம்.
- பிரதிவாதி தன்னைத் தற்காத்துக்கொள்ள சாட்சியங்களை முன்வைக்கும்போது, அந்த சாட்சியங்கள் குறித்து தங்கள் கைவசம் உள்ள தகவல்களை உங்கள் வழக்கறிஞருக்கு முன்கூட்டியே அளிக்கலா. உங்களின் வழக்கறிஞர் தன் பங்கிற்கு அது குறித்து அரசு வழக்கறிஞருக்குத் தெரிவிப்பார். அப்படிச் செய்வது எதிர் தரப்பு சாட்சியத்தைச் சிறப்பான முறையில் குறுக்கு விசாரணை செய்ய அவருக்கு உதவியாக அமையும்.
- குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்னர் தண்டனை அறிவிப்பு: குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்னர், தண்டனை கோரும் தரப்பினர், குற்றம் மிகக் கடுமையானது என்றால், கடுமையான தண்டனைத் தரப்பட வேண்டும் என்று கோருவது வழக்கம். ஆனால், நடைமுறையில் பொதுவாகப் பார்க்கும்போது தண்டனையின் அளவு என்ன என்று தீர்மானிப்பது நீதிமன்றத்தின் முடிவுக்கு விடப்படுகிறது. எப்படியிருந்தாலும், குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், தண்டனை பெறப்போகும் நபரிடம் ஏதேனும் சான்றாதாரத்தை அளிக்க முடியுமா என்று நீதிமன்றம் கேட்கும். அவரிடம் பரிதாபம் காட்டுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்று பார்க்கப்படும். அவர் தனது கடந்த கால நன்னடத்தையைச் சான்றாதாரமாகச் சொன்னால் சம்பந்தப்பட்ட சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு பொருத்தமான விவரங்கள் திரட்டிக்கொள்ளப்படும். அந்நிலையில் அச்சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து தீய நடத்தையை நிரூபிக்க முடிந்தால் அது வழக்கிற்கு உதவுக் கூடியதாக இருக்கும்.

## 24. சிறார் சாட்சியங்களுக்கு என்று சிறப்பு ஏற்பாடுகள் ஏதும் இருக்கின்றதா?

POCSO சட்டத்தின்படி அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களுக்கு சிறப்பு அதிகாரங்களையும் நடைமுறைகளையும் கொண்டுள்ளன. அவற்றில் பின்வருவனவும் அடங்கும்:

(அ) சிறப்பு அரசு வழக்கறிஞரோ அல்லது குற்றவாளிக்கென்று ஆஜராகும் வழக்கறிஞரோ சிறாரிடம் கேட்க வேண்டிய கேள்விகளை முன்னதாக நீதிமன்றத்திடம் ஒப்படைத்துவிட வேண்டும். சிறப்பு நீதிமன்றம் பின்னர் அந்தக் கேள்விகளைச் சிறாரிடம் கேட்கும்.

(ஆ) விசாரணையின் போது சிறாரின் நலனுக்காக சிறப்பு நீதிமன்றம் அடிக்கடி விசாரணையின் போது இடைவேளைகள் விடலாம்.

(இ) சிறாரின் நம்பிக்கையைப் பெற்ற குடும்ப உறுப்பினர், பாதுகாவலர், நண்பர் அல்லது உறவினர் சிறாருடன் நீதிமன்றத்தில் இருக்க வேண்டும்.

(ஈ) சாட்சியமளிப்பதற்காக சிறாரை திரும்பத் திரும்ப நீதிமன்றத்திற்கு அழைக்காமல் இருக்க உறுதி செய்ய வேண்டும்.

(உ) சிறாரின் மீது தாக்குதல் தொடுப்பது போன்ற, அல்லது அவரின் நடத்தையை சிதைத்துக் காட்டுவது போன்ற கேள்விகள் கேட்கப்பட அனுமதிக்கப்படாது. சிறாரின் கௌரவத்தை அனைத்து சமயத்திலும் காக்க வேண்டும்.

(ஊ) புலன் விசாரணை அல்லது விசாரணையின் எந்தக் கட்டத்திலும் சிறாரின் அடையாளத்தை வெளிப்படுத்தாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

டெல்லி உயர்நீதிமன்ற கமிட்டியின் ''குற்றவழக்குகளில் எளிதில் பாதிப்புக்கு ஆளாகக் கூடிய சாட்சியங்களிடம் சான்றாதாரங்களைப் பதிவு செய்வதற்கான வழிகாட்டுதல்களில் ('Guidelines for Recording of Evidence of Vulnerable Witnesses in CriminalMatters.) பின் வருவனவும் சேர்க்கப்பட்டுள்ளன: அதன்படி சிறப்பு நீதிமன்றத்தில் நடக்கும் அனைத்து விசாரணைகளும்

- மூடப்பட்ட அறையில் நடைபெற வேண்டும். குழந்தையின் பெற்றோர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய ஒரு நபர் அப்போதிருக்க வேண்டும். சிறப்பு நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல், சிறாரின் அடையாளத்தை வெளிப்படுத்தி விடக்கூடிய, எந்தவொரு விபரமும் ஊடகங்களுக்கு வெளியிடப்படக் கூடாது.

- சிறப்பு நீதிமன்றம் குற்றத்தைப் புலன் கொண்ட 30 நாட்களுக்குள் சிறாரின் சாட்சியத்தைப் பதிவு செய்ய வேண்டும். அதற்கு மேல் தாமதமானால், நீதிமன்றம் அதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும்.

- சாட்சியத்தைப் பெறும்போது குற்றவாளியும் குழந்தையும் தனிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதுபோல சாட்சியங்கள் எடுக்கும்போது பின்வரும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்

(அ) சிறார் இருக்கும் அறையையும் நீதிமன்ற அறையையும் நேரடிக் காட்சி வீடியோ மூலம் இணைக்கவும்: இதன் மூலம் அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ள அல்லது முதிராப் பருவத்திலுள்ள சிறார், நீதிமன்றத்தின் சூழல் காரணமாக, அல்லது குற்றவாளியின் அருகாமை காரணமாக பாதிப்புக்கு ஆளாகாமல் சாட்சியம் அளிக்க வாய்ப்பு கிடைக்கும். சிறார் குற்றவாளியைப் பார்க்காதிருக்கும் படியும், இருந்தபோதும், தனியறையில் உள்ள சிறார் சாட்சியமளிப்பதை நீதிமன்றத்தில் உள்ளவர்கள் பார்க்கும் வகையிலும் இரண்டு அறையிலும் பேசப்படுபவற்றை இரண்டு அறையில் உள்ளவர்களும் கேட்கும் வகையிலும் நேரடி வீடியோ இணைப்பு செய்யப்பட வேண்டும்.

(ஆ) சிறார் சாட்சியமளிக்கும்போது பின்வரும் நபர்கள் மட்டுமே அந்த அறையில் இருக்க முடியும்: சாட்சியமளிக்கும் சிறாரின் நம்பிக்கைக்குரிய பெற்றோர், அல்லது பாதுகாவலர் அவரது நண்பர் அல்லது உறவினர்; சிறார் நல கமிட்டியால் நியமனம் செய்யப்பட்ட ஆதரவளிக்கும் நபர்; சிறார் சாட்சியமளிக்கும் முறையுடன் பரிச்சயமுள்ள மொழிபெயர்ப்பாளர் அல்லது விளக்கவுரையாளர் அல்லது சிறப்புக் கல்வி நிபுணர்; சிறாரின் நல்வாழ்விற்கு நலனுக்கு உகந்தது என்று நீதிமன்றம் கருதுகின்ற அரசு சாரா அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தொழில்முறையாளர்கள்/ நிபுணர்கள்/ மனோவியல் நிபுணர்கள்/ சமூக சேவை உடல் நலம் மன நலம் சிறார் மேம்பாடு தொடர்பான நிபுணர்கள்; நிதிமன்ற அலுவலர், நேரடி வீடியோ தொடர்பை இயக்குகின்ற ஒருவர். சாட்சியளிப்பது வீடியோ முறையில் நடக்கவில்லை என்றால், நீதிமன்ற அறையில் நீதிபதி, குற்றவாளி, சிறப்பு அரசு வழக்கறிஞர், எதிர் தரப்பு வழக்கறிஞர், குழந்தையின் வழக்கறிஞர், வழக்கில் சாட்சியமளிப்பவர் அல்லாத காவல்துறையினர், நீதிமன்றத்தின் நிர்வாக அதிகாரி ஆகியோர் மட்டும் நீதிமன்ற அறைக்குள் இருக்கலாம்.

(இ) சிறாரின் சாட்சியம் விசாரணை செய்யப்படும்போதும் குறுக்கு விசாரணை செய்யப்படும்போதும் வீடியோ சாதனம் ஒன்று செய்து நீதிமன்ற அறையில் உள்ளவர்களுக்கு நிகழ்வைப் பதிவு செய்து ஒளிபரப்பும்.

(ஈ) பொம்மைகள், உடலியல் ரீதியாக மிகச் சரியான தோற்றம் அளிக்கும் பொம்மைகள், வரைபடங்கள், ஜவுளிக் கடை பொம்மைகள் போன்ற பொருத்தமான செய்து காட்டும் முறையிலான சாதனங்கள் போன்ற சாதனங்களைச் சிறார் விசாரணையின் போது பயன்படுத்தும் வகையில், சிறாருக்கு சாட்சியமளிக்க உகந்த வகையில் சிறப்பு நீதிமன்றத்தில் வைத்திருக்க வேண்டும். அந்த உதவி சாதனங்கள் குழந்தை சாட்சியமளிக்கும் அறையில் இருக்க வேண்டும். (உ) சிறார்கள் அறை (1) சிறப்பு நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் வரை காத்திருக்கும் சிறார் குழந்தைகள் காத்திருப்பு அறையில் இருக்க வேண்டும். அந்த அறையில் குழந்தைகள் விளையாடுவதற்கான பொம்மைகள், புத்தகங்கள், வரைவதற்கான பென்சில், வண்ணங்கள் போன்றவை, உள்ளரங்க விளையாட்டுப் பொருட்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். (2) குழந்தைகள் காத்திருக்கும் அறையுடன் இணைந்த கழிப்பறை வசதியும் குடிப்பதற்கு நீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளும். மின்னிணைப்பு, விளக்கு, காற்றோட்டம், (பருவ நிலைக்கு ஏற்ப) குளிர் அல்லது வெப்பமூட்டும் வசதிகளும் செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், வசதியாக உணரும் வகையில், குழந்தைகளுக்குப் பொருத்தமான உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். (3) மேலும், குழந்தைகளின் அறைக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். குற்றவாளி, அல்லது அவரின் வழக்கறிஞர் அல்லது குழந்தைக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய எந்தவொரு நபரும் உள்ளே நுழைந்துவிடாத படி தடுக்கப்பட வேண்டும்.

(ஊ) இதர: (1) உணர்வுபூர்மான பாதுகாப்புப் பொருட்களான போர்வை, பொம்மை போன்றவற்றை வைத்திருக்க விசாரணையின் போது சிறாரை அனுமதிக்க வேண்டும். (ஆ) சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதி விசாரணை நடத்தும்போது நீதிமன்ற உடைகளை அணிந்திருக்க கூடாது மட்டுமல்லாமல், சிறார் அவரை நண்பர்/ நலம் விரும்பி என்று எடுத்துக்கொள்ளும் வகையில் பொருத்தமான உயரத்தில் அமர்ந்திருக்க வேண்டும். எந்தவிதமான மனோவியல் தடைகளையும் ஏற்படுத்திவிடக் கூடாது.

## 25. நான் வயதுக்கு வந்தபெண். நான் என் கணவனால் வன்புணர்ச்சி/ துஷ்பிரயோகம் செய்யப்பட்டேன். குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005 (The Protection of Women from Domestic Violence Act, 2005) எனக்குள்ள உரிமைகள் என்ன?

உங்களுக்குப் பின்வரும் உரிமைகள் இருக்கின்றன:

- இல்லத்தில் வாழ்வதற்கான உரிமை (PWDVA சட்டப் பிரிவு) 17: குடும்ப உறவில் ஒரு இடத்தில் வாழும் பெண், அவளுக்கு உரிமை இருக்கிறதோ இல்லையோ, அந்த இடத்தின் சட்ட பூர்வ உரிமை அவளுக்கு இருக்கிறதோ இல்லையோ, அல்லது அவளுக்கு அதன் வருவாயில் பங்கிருக்கிறதோ இல்லையோ அவள் அந்த இல்லத்தில் அல்லது அந்த இல்லத்தின் ஒரு பகுதியில் சட்டத்தின் நடைமுறைப்படி மறுக்கப்படாத வரை தங்கியிருக்க உரிமையுள்ளவள். வெளியேற்றப்படாதிருக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.

- பாதுகாப்பு உத்தரவு (பிரிவு 18 PWDVA சட்டம்) உங்கள் கணவர் உங்கள் மீது குடும்ப வன்முறையை அல்லது உத்தரவில் சொல்லப்பட்டுள்ள வேறு எந்த ஒன்றையும் உங்கள் மீது தொடுக்காத வகையில், அல்லது நிகழ்வதைப் பார்த்துக்கொண்டிராத வகையில் அல்லது அதுபோன்ற நிகழ்வுக்குத் துணை போகாதவகையில் PWDVA சட்டப் பிரிவு 18 ன் கீழ் நீங்கள் நீதிமன்ற உத்தரவு பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி பாதுகாப்பு உத்தரவில், உங்களைச் சார்ந்தவர்கள், பிற உறவினர்கள், உங்களுக்கு உதவுபவர்கள் உள்ளிட்டவர்களும் பாதுகாப்பு ஆணையின் பாதுகாப்பிற்கு உட்பட்டவர்கள்.

பாதுகாப்பு உத்தரவை மீறுவது PWDVA சட்டப் பிரிவு 31ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். அது புலன் கொள்ளத்தக்க, பிணையில் விட இயலாத குற்றமாகும். பண நிவாரணம்:

- PWDVA சட்டப் பிரிவு 20ன் படி செலவான பணத்திற்கும், ஆவன இழப்புகளுக்கும், பராமரிப்பிற்கான கட்டணம் உட்பட, மருத்துவ செலவு உட்பட நிவாரணமாக அளிக்கப்பட வேண்டும். (உதாரணமாக, கருக்கலைப்பு செய்து கொள்வதற்கான செலவைச் சொல்லலாம்).

- வாழும் இடத்திற்கான உத்தரவு பிரிவு 18 PWDVA சட்டம் பிரிவு 19ன் படி, பகிர்ந்துகொள்ளப்படும் இல்லத்தில் உங்களுடைய உடமைகளைத் தொந்தரவு செய்யாமலிருப்பதற்கும், அல்லது நீங்கள் வாழும் பகுதியில் நுழையாதிருப்பதற்குமான உத்தரவை வாழும் இடத்திற்கான உத்தரவை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், பிரதிவாதி நீங்கள் பகிர்ந்துகொண்டு வாழும் இல்லத்தில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்றும், பகிர்ந்துகொள்ளப்படும் இல்லத்தை வேறு ஒருவருக்குக் கொடுத்து விடுவது அல்லது விற்றுவிடுவதைச் செய்யாதிருக்கவும் அல்லது உங்களுக்கான மாற்று வாழிடம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும் உத்தரவு பெற்றுக்கொள்ள முடியும்.

- PWDVA சட்டத்தின் பிரிவு 21 ன் படி எந்தக் குழந்தையையும் தற்காலிககமாக கைவசம் வைத்துக்கொள்வது (Temporary Custody)
- குடும்ப வன்முறையின் காரணமாக ஏற்படும் காயங்களுக்கு (உதாரணமாக மன ரீதியான காயம்) சேதாரங்களுக்கு PWDVA சட்டப் பிரிவு 22கீழ் இழப்பீடு மற்றும் நிவாரணைத் தொகை வழங்கப்பட முடியும்.

**அட்டவணை1: இந்திய தண்டனைச் சட்டத்தின் படியான (Indian Penal Code, 1860) குற்றங்களும் அவற்றுக்கான தண்டனைகளும்**

| எண் | குற்றமும் விளக்கமும் | இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|
| 1. | **பிரிபு 354 A**<br>ஆண் ஒருவனின் பின்வரும் செய்கைகள் பாலியல் துன்புறுத்தலில் அடங்கும்: (i) உடல் ரீதியாகத் தொடுவது, வரவேற்க முடியாத பாலியல் தனமை நிறைந்த சமிக்ஞைகளுடன் அச்சாரம் (கூப்பிடுவது)செய்வது (ii) பாலியல் சலுகை தரும்படி கோருவது நிர்ப்பந்திப்பது (iii) பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக பாலியல் ஆபாச மானவற்றைக் காட்டுவது; (iv) பாலியல் பொருள் தரும் கூற்றுகள் | (I) முதல் (iii) வரையிலான நிகழ்வுகளுக்க 3 ஆண்டுகள் வரை நீளக் கூடிய சிறைத் தண்டனை அல்லது நீளக்கூடிய கடுங்காவல் சிறைத்தண்டனை அபராதம் அல்லது இரண்டும் (iv)வது வகைப்பட்ட குற்றத்திற்கு 1 ஆண்டு சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும். |
| 2. | **பிரிவு 354 B**<br>துகிலுரியும் நோக்கத்துடன் அல்லது நிர்வாணப்படுத்த வற்புறுத்தி ஒரு பெண்ணைத் தாக்குவது அல்லது குற்ற நோக்கத்துடன் வலுக்கட்டாயப்படுத்துவது | மூன்றாண்டுகளுக்குக் குறையாத சிறைத்தண்டனை அது 7 ஆண்டுகள் வரை நீளலாம் மேலும் அபராதம் விதிக்கவும் வாய்ப்புள்ளது. |
